

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 213 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 01 – வியாழக்கிழமை 14 மார்ச் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 213 : Thiruvalluvar Year - 2055 - Panguni 01 - Thursday 14 March 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## தேர்தல் அரசியலுக்காக ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது!

# தமிழ்நாட்டில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வராது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மார்ச் 14 -**

**“ஒன்றிய பா.ஜ.க. அரசு நடைமுறைப்படுத்தியுள்ள குடியுரிமை திருத்தச் சட்டம் (CITIZENSHIP AMENDMENT ACT (CAA) இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது; எனவே தமிழ்நாட்டில் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய இறுதி நாட்களில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இருந்து வரும் வேளையில், பல்வேறு தரப்பு மக்களாலும் எதிர்க்கப்பட்ட, குடியுரிமை திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்திட அவசர கதியில் நேற்று முன்தினம் அறிவிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

### மதச்சார்பற்ற தன்மைக்கு முற்றிலும் எதிரானது!

இது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு முற்றிலும் எதிரானது மட்டுமல்ல; பலவகையான மொழி, இன, மதம் மற்றும் வாழ்விட சூழல் ஆகியவற்றால் வேறுபட்டிருந்தாலும், ஒன்றுபட்ட உணர்வுடன் வாழ்ந்துவரும் இந்திய மக்களின் நலனுக்கும், இந்திய தாய்த்திருநாட்டின் பன்முகத் தன்மைக்கும், மதச்சார்பற்ற தன்மைக்கும் முற்றிலும் எதிரானதாகும்.

அதுமட்டுமல்ல; சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் முகாம்வாழ் தமிழர்களின் நலனுக்கும் எதிரானதுதான் இந்தச் சட்டம்.

### பல்வேறு மாநிலங்கள் எதிர்ப்புக் குரல்!

இதன் காரணமாகத்தான், கழக அரசு அமைந்தவுடனேயே, அதாவது, கடந்த 8.9.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக, அரசின் சார்பாக நான் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அதனை நிறைவேற்றி, இச்சட்டத்தினைத் திரும்பப் பெறவேண்டுமென வலியுறுத்தி ஒன்றிய அரசுக்கு அதனை அனுப்பி வைத்தோம். தமிழ்நாட்டைப் போலவே, பல்வேறு மாநிலங்களும் இதனை எதிர்த்து குரல் கொடுத்து வந்துள்ளன.

**உச்சநீதிமன்றத்தின் கண்டனத்திலிருந்து தப்பிப்பதற்காக மக்களை திசைதிருப்பும் நோக்கத்துடன், தேர்தல் அரசியலுக்காக இந்தச் சட்டத்தை தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளதோ என கருத வேண்டியிருக்கிறது.**

இந்த நிலையில், உச்சநீதிமன்றத்தின் கண்டனத்திலிருந்து தப்பிப்பதற்காக மக்களை திசை திருப்பும் நோக்கத்துடன், தேர்தல் அரசியலுக்காக இந்தச் சட்டத்தை தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளதோ என கருத வேண்டியிருக்கிறது.

### தேவையற்ற ஒன்று இரத்து செய்யப்பட வேண்டியது!

இந்திய மக்களிடையே பேதங்களைத் தோற்றுவிக்க வழிவகை செய்யும் இந்தச் சட்டத்தால் எந்த விதமான நன்மையோ, பயனோ இருக்கப் போவதில்லை. இந்தச் சட்டம் முற்றிலும் தேவையற்ற ஒன்று என்பதுடன், இரத்து செய்யப்பட வேண்டியது என்பதுதான் இந்த அரசின் கருத்தாகும்.

எனவே, ஒன்றிய அரசு நிறைவேற்றியிருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் நிறைவேற்றிட தமிழ்நாடு அரசு எவ்வகையிலும் இடமளிக்காது; இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு சட்டத்திற்கும் தமிழ்நாடு அரசு இடம் கொடுக்காது என்பதனை தமிழ்நாட்டு மக்களுக்கு நான் இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (12.3.2024) தலைமைச் செயலகத்தில், மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள், மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள பதினோரு (11) ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தார். இந்த நிகழ்வின்போது, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா உள்ளார்.

### கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இஸ்லாமியர்களுக்கு

## ரமலான் நோன்பு திறப்புக்காக நலத்திட்ட உதவிகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை, மார்ச் 14-*

*கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இஸ்லாமியர்களுக்கு ரமலான் நோன்பு திறப்பிற்காக நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2024) முகாம் அலுவலகத்தில், “உதவுதல் நம் முதல் கடமை” என்ற பெயரில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 2000 இஸ்லாமியர்களுக்கு ரமலான் நோன்பு திறப்பிற்காக 26 கிலோ அரிசி, துணிமணிகள், பேரிச்சம்பழம், நிதிஉதவி அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*பரிசுத் தொகைப்பினை பெற்றுக் கொண்ட இஸ்லாமியப் பெருமக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன், ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்தை கடுமையாக எதிர்த்து வருவதற்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.*

*இந்நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.*

## “ஒரே தேசம், ஒரே தேர்தல்” என்பது நாட்டின்

# கூட்டாட்சி கட்டமைப்பை அடியோடு தகர்க்கும் முயற்சி!

**சென்னை, மார்ச் 14 -**

**“ஒரே தேசம், ஒரே தேர்தல்” என்பது நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை அடியோடு சாய்க்கும் அப்பட்டமான முயற்சி” என்று கழகப் பொதுச் செயலாளரும் நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கூறியுள்ளார்.**

“Indian Democracy at Cross Roads” **என்ற கூட்டத் தொடரில் “தடம் புரண்ட மதச்சார்பின்மையும் கூட்டாட்சியும்” என்ற தலைப்பில் மார்ச் 11 - அன்று தியாகராயர் நகரிலுள்ள பிட்டி.தியாகராயர் அரங்கில் கூட்டம் நடைபெற்றது.**

## “தடம் புரண்ட மதச்சார்பின்மையும் கூட்டாட்சியும்” என்ற கருத்தரங்கில் அமைச்சர் துரைமுருகன் உரை!

இக்கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியதாவது:-

முதலாவதாக, “மதச்சார்பின்மையும் கூட்டாட்சியும் தடம் புரண்டது” என்ற மிக முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிக்க இங்கு வந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த தலைப்பு நம் நாட்டின் தற்போதைய நிலையை விவரிக்கிறது.

“வேற்றுமையில் ஒற்றுமை” என்ற நிர்மாண முழக்கங்களில் அமைக்கப்பட்ட நாடு, பிரித்தாளும் பா.ஜ.க அரசாங்கத்தால் துண்டாடப்படுகிறது. இன, மொழி மற்றும் மத வேறுபாடுகளை எதிர்கொண்டு ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்தியது மற்றும் இந்தியா என்ற ஒரே கூரையின் கீழ் நமது பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்ததால் இந்திய அரசியலமைப்பு சட்டம் தனித்தன்மை வாய்ந்தது என்று அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்த சிற்பிகள் தெரிவித்துள்ளனர்.

### பா.ஜ.க. எம்.பி.யின் பேச்சு!

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய கர்நாடக பா.ஜ.க. எம்.பி. அனந்த்குமார் ஹெக்டே, இந்துக்களுக்கு ஆதரவாக செயல்பட “மதச் சார்பற்ற” என்ற வார்த்தையை அரசியல் சாசனத்தில் இருந்து நீக்கலாம் என்று கூறினார்.

இது என்ன வகையான கருத்து? இந்த நாடு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று



விரும்புகிறார்கள். அவர்களுக்கு ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற ஆசை இல்லை, ஆனால் பிரித்துவைக்க மட்டுமே ஆசை.

இந்திய அரசியலமைப்பு இப்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், நாட்டின் மதச்சார்பின்மை மற்றும் கூட்டாட்சி அமைப்பை அழிக்க எதையும் செய்வார்கள்.

### மத்திய அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன!

மாநிலங்கள் வலுப்பெற்ற பிறகுதான் ஒரு நாடு வலுவாக மாறும், ஆனால் இங்கு மாநிலங்களை பின்னுக்கு இழுக்கவும், அதிகாரங்களை குறைக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரே மதம், ஒரே மொழி, ஒரே குரல், ஒரே தேர்தல் என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. ஆங்கிலேயர்களின் காலத்தில் கூட அதிகாரம் இது போன்ற ஒரு நிறுவனத்தை மையமாகக் கொண்டிருக்கவில்லை.

மாநிலங்களை வலுவிழக்கச் செய்யவும், அவற்றின் பங்கைக் குறைக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நீங்கள் அவர்களுடன் உடன்பட்டால் அது மிகவும் நல்லது. நீங்கள் உடன்படவில்லை என்றால், அவர்கள் உங்களை பலவீனப்படுத்த எல்லா வழிகளையும் பயன்படுத்துகிறார்கள். பா.ஜ. ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் இரண்டாம் தரமாக நடத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் நன்மதிப்பினை குறைக்கும் கருவியாக சி.பி.ஐ, அமலாக்கத்துறை மற்றும் ஆளுநர் போன்ற மத்திய அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு சமீபத்திய உதாரணம், “ஒரே தேசம், ஒரே தேர்தல்” அரசாங்கத்தின் பல்வேறு நிலைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும், இது நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை அடியோடு சாய்க்கும் அப்பட்டமான முயற்சி ஆகும்.

உள்ளாட்சித் தேர்தல் என்பது மாநிலப் பட்டியலின் கீழ் மட்டுமே வரும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த ஒன்றிய அரசு எங்கிருந்து அதிகாரம் பெறுகிறது? உள்ளாட்சித் தேர்தலில் அவர்களுக்கு எந்த கருத்தும் இருக்கக்கூடாது, ஆனால் உள்ளாட்சி

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 14-03-2024

# தேர்தல் நேரத்தில் மட்டும் விலை குறையும்!

**வீட்டுப் பயன்பாட்டு சிலிண்டரின் விலை தேர்தல் நேரத்தில் மட்டும் குறையும் வகையில் 'செட்' செய்து வைத்துள்ளார் பிரதமர் நரேந்திரமோடி. அவர் பிரதமராக வந்தது முதல் சிலிண்டர் விலை ஏறிக் கொண்டே இருக்கிறது. தேர்தல் நேரம் வந்து விட்டால் மட்டும் 'அதுவாகவே' குறைந்து விடும்!**

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் தேதி அட்டவணை விரைவில் வெளியாக உள்ள நிலையில், தோல்வி பயத்தில் உள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு, சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை 100 ரூபாய் குறைத்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்துக்காக என்றால் 2023 இல், 2022 இல், 2021 இல், 2020 இல் சர்வதேச மகளிர் தினம் வரவில்லையா? அல்லது பெண்கள் சிலிண்டர் வாங்கவில்லையா?

மகளிர் தினத்துக்காக சிலிண்டர் விலையைக் குறைக்கிறேன் என்பதே பிற்போக்குத்தனம் இல்லையா? பெண்ணின் அடையாளம் சமையலறை சிலிண்டர்தானா?

**2013 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 410 ரூபாய்!**

**2014 ஆம் ஆண்டு மோடி, பிரதமராக வருகிறார்!**

**2014 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 414 ரூபாய்!**

**2015 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 452 ரூபாய்!**

**2016 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 432 ரூபாய்!**

**2017 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 495 ரூபாய்!**

**2018 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 500 ரூபாய்!**

**2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நடக்கப் போகிறது. சிலிண்டர் விலையைக் குறைத்துவிட்டதாகக் காட்ட பிரதமர் கண்துடைப்பு நாடகம் ஆடினார். 2019 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னதாக 495 ரூபாய் என 5 ரூபாய் விலை குறைக்கப்பட்டது.**

இதே ஆண்டில் இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்தார். ஓட்டுப் போட்ட மக்களை அவரே பழிவாங்கத் தொடங்கினார்.

**2020 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 694 ரூபாய் ஆக ஆனது!**

**2021 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 889 ரூபாய் ஆனது!**

**2022 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 1053 ரூபாய் ஆனது!**

**2023 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 1103 ரூபாய் ஆனது.**

**ஐந்து மாநிலத் தேர்தல் வந்ததும் சிலிண்டர் விலையைக் குறைத்தார் பிரதமர். சிலிண்டர் விலை 910 ரூபாய் ஆனது!**

**இப்போது நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது. சிலிண்டர் விலையை 810 ரூபாய் ஆக்கிவிட்டார் பிரதமர். தேர்தல் முடிந்துதான் ஆட்சிக்கு வந்தால் 1500 ரூபாய் ஆக்கிவிடுவார் மோடி.**

இப்படி ஒரு கபட நாடகத்தை எந்தக் கூச்சமும் இல்லாமல் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். 410 ரூபாயாக இருந்த சிலிண்டர் விலையை 1103 ரூபாய்க்கு மூன்று மடங்கு உயர்த்தியதுதான் பிரதமர் மோடி அரசின் சாதனையாகும். இதை விட மத்தியதர மக்களை பழிவாங்க முடியாது. பத்தாண்டு காலமாக இதை இரக்கமற்றுச் செய்து விட்டு, தேர்தலுக்காக 100 ரூபாய் குறைக்கிறேன் என்பது அரசியல் நாடகம் இல்லாமல் வேறென்ன? குறைப்பதாக இருந்தால் பாதி விலைக்கு குறைக்க வேண்டியதுதானே? யார் தடுத்தார்கள்?

2021 ஆம் ஆண்டு சூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் என மாதம் தோறும் உயர்த்தப்பட்டது.

2022 மே மாதம் மட்டும் 2 முறை வீட்டு உபயோக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்ட நிலையில் சூன் மாதமும் உயர்த்தப்பட்டது. சூலையிலும் உயர்த்தப்பட்டது.

சிலிண்டர் விலையைக் குறை என்றால் அது எங்கள் கையில் இல்லை, பொதுத்துறை நிறுவனங்கள்தான் குறைக்க வேண்டும் என்பார்கள். ஆனால் தேர்தல் நேரத்தில் இந்த நிறுவனங்கள் வாயைப் பொத்திக் கொண்டு இருந்துவிடும். விலைகளை இவர்கள் விருப்பத்துக்கு குறைத்துக்கொள்வார்கள். சந்தையின் நிலைமைக்கு ஏற்ப எண்ணெய் நிறுவனங்களே அதன் விலையைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்று சொன்னது யார்? பா.ஜ.க. ஆட்சிதான்.

2014-ம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சி பொறுப்பேற்றபோது சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை 106 டாலராக இருந்தது. அப்போது சமையல் சிலிண்டர் விலை 410 ரூபாய் மட்டுமே. ஆனால், தற்போது சர்வதேச கச்சா எண்ணெய் விலை 86 டாலராக குறைந்துள்ள நிலையில், சிலிண்டர் விலையை ஆயிரம் ரூபாய்க்கு உயர்த்தி மக்கள் தலையில் சுமையைக் கட்டியது மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு.

சிலிண்டர் விலை உயரும் போது காங்கிரசு ஆட்சி காலத்தில் மானியம் இருந்தது. அதனை நாங்கள் பணமாகத் தரப்போகிறோம் என்று முதலில் சொன்னது பா.ஜ.க. அரசு. 563 ரூபாயாக இருந்த மானியம், இன்று 25 ரூபாயாக தேய்ந்துவிட்டது.

கேட்டால் கோடிக்கணக்கான மக்களுக்கு புதிய கேஸ் இணைப்பு தந்து விட்டதை சாதனையாக பா.ஜ.க. சொல்கிறது. சமீபத்திய ஆய்வின்படி இந்த திட்டத்தில் இணைப்பு பெற்ற 92 சதவிகித மக்கள் காஸ் சிலிண்டரை ரீஃபில் செய்வதே கிடையாது. எட்டு சதவிகித மக்கள்தான் ரீஃபில் செய்கிறார்கள். எனவே, 'பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தை' பிரதான் மந்திரி புஸ்வாணத் திட்டம் என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2024) முகாம் அலுவலகத்தில், "உதவுதல் நம் முதல் கடமை" என்ற பெயரில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 2000 இஸ்லாமியர்களுக்கு ரமலான் நோன்பு திறப்பிற்காக 26 கிலோ அரிசி, துணிமணிகள், பேரிச்சம்பழம், நிதிஉதவி அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.



நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை, ஆம் ஆத்மி கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஏ.என்.வசீகரன், மாநில மகளிர் அணி தலைவி ஸ்டெல்லா மேரி, வடசென்னை மாவட்டத் தலைவர் பாரூக், தென்சென்னை மாவட்டச் செயலாளர் மணிகண்டன் ஆகியோர் நேற்று முன்தினம் (12.3.2024), காலை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்தனர்.

## கடம்பத்தூரில் தெருமுனைக் கூட்டம்

திருவள்ளூர், மார்ச் 14–

கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மற்றும் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் கே.அரிகிருஷ்ணன் தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பி.கே.நாகராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள் வி.ராஜசேகர், கே.செங்குட்டுவன், மெய்யழகன், ஜெகதாம்பாள், சி.ஆர்.குமரன், கொப்பூர் டி.திலீப்குமார், சி.ரவிக்குமார், ஆர்.மோகனசுந்தரம், திருவேணி நாகராஜ் ஆகியோர் முன்னிலையில், கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி மேலும் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு கால சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் கே.திராவிட பக்தன், ஆர்.டி.இ.ஆதிசேஷன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், சி.சு.ரவிச்சந்திரன், மண்புகழ் மனோகரன், வி.எஸ்.நேதாஜி, எம்.பன்னீர் செல்வம், எஸ்.பாலசுப்பிரமணி, கே.ஏ.மதியழகன், கே.பி.தமிழ்ச்செல்வன், ஆர்.ராஜேந்திரகுமார், எம்.சேகர், ஏ.பெருமாள், ஏ.எஸ்.மணி, ஆர்.வாசு, பிரகாஷ்ஞான ஒளி, ஆர்.ரமணன், எம்.முத்தமிழரசன், எம்.கார்த்திக், பி.ஜானகிராமன், எம்.முரளி, ஆர்.ராஜலிங்கம், பி.பாபு, கே.பாலாஜி, எஸ்.சண்முக ஆனந்தன், எஸ்.லோகிதாசன் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

### தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

# அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி ஆதரவு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினை அக்கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் எஸ்.கர்ணன் சந்தித்து தெரிவித்தார்!



**சென்னை, மார்ச் 14 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநில குழு மாநிலப் பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு அளித்தனர்.**

இதுகுறித்த விவரம் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநிலக்குழு பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் தேசியச் செயலாளர்கள் எஸ்.சுரேஷ்தேவன், பி.எஸ்.தேவன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள், நேற்று முன்தினம் (12.3.2024), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு அனைத்து தொகுதிகளிலும் பாடுபடுவதாக தெரிவித்தனர்.

### அரசு அலுவலர்கள் – ஆசிரியர்களுக்கு 46 சதவீதமாக உள்ள

# அகவிலைப்படி 50 சதவிகிதமாக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 14-**

**அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 46 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 1.1.2024 முதல் 50 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

மக்கள் நலன் கருதி தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தும் பல முன்னோடித் திட்டங்களை நாடே வியந்து பார்க்கும் வகையில் நடைமுறைபடுத்துவதில் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட கடும் நிதி நெருக்கடி மற்றும் கடன் சுமைக்கு இடையே அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை முதலமைச்சர் கனிவுடன் பரிசீலித்து, 01.07.2023 முதல் ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும்போதெல்லாம் உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதைப் பின்பற்றி அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்கிட அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

**1.1.2024 முதல் வழங்கப்படும்!**

அவ்வகையில், ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு 01.01.2024 முதல் 46 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 50 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிலையில், மாநில அரசு பணியாளர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 46 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 4 சதவீதம் உயர்த்தி 50 சதவீதமாக 01.01.2024 முதல் உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள். ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய். 2587.91 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிவிப்பில் கூறியுள்ளார்.

காலை உணவு - மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட

# மாநிலத் திட்டக்குழுவின் ஆய்வு அறிக்கைகள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் திட்டக்குழு துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன் வழங்கினார்!

சென்னை, மார்ச் 14-

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (12.3.2024) தலைமைச் செயலகத்தில், மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள், மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள பதினோரு (11) ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தார். இவற்றில், தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டங்களான, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் ஆகியவற்றின் மீதான மதிப்பீடுகளும் மற்றும் பழங்குடி சமுதாயத்தினர் நிலை, பல்கலைக்கழகங்களின் வினாத்தாள்கள் தரம், கால நிலை மாற்றம், வனம் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய கருப்பொருள்களின் மீதான ஆய்வு அறிக்கைகளும் இடம் பெற்றுள்ளன.**

முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநிலத் திட்டக்குழு செயல்பட்டு வருகிறது. அரசின் சிறப்புத் திட்டங்களை மதிப்பீடுசெய்வது, பல்வேறு கருப்பொருள்களில் ஆய்வு மேற்கொள்வது மற்றும் மாநிலத்தில் நிலவிவரும் பல்வேறு சவால்களுக்கும், வாய்ப்புகளுக்கும் தகுந்த கொள்கைகளை வடிவமைப்பது உள்ளிட்டவை மாநிலத் திட்டக்குழுவின் செயல்பாடுகளாகும்.

அந்த வகையில், மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள பதினோரு ஆய்வு அறிக்கைகள் முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த ஆய்வறிக்கைகளின் விவரம்:

**1. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இத்திட்டத்தினால் அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களிடம் ஏற்படும் தாக்கம்**

இந்த ஆய்வின் முதல்கட்ட அறிக்கையில், இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு, அதன் அளவு, மாணவர்களின் கல்வி மற்றும் உடல் செயல்பாடுகள் குறித்து பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

**2. தமிழ்நாட்டில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கான பராமரிப்பு குறித்த மதிப்பீட்டு ஆய்வு**

இந்த மதிப்பீட்டு ஆய்வானது மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், கண்டறியப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ள தொற்றா நோயுற்ற மக்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ சேவைகளையும், அவர்களுக்கு மருந்துகள் தொடர்ந்து வழங்கப்பட்டதனையும் கண்டறியும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது.

**3. தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் செயலாக்கம் குறித்த ஓர் மதிப்பீட்டாய்வு**

தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் தேவையையும் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களின் முன்னுரிமைகளுக்கேற்ப இத்திட்டம் இயைந்து செயல்படத்தக்க வகையில், மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களையும் குறித்து இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

**4. தமிழ்நாட்டின் பழங்குடி கிராமங்களில் அரசு திட்டங்களின் செயல்படுத்தல் திறன் மீதான மதிப்பீட்டு ஆய்வு**

இந்த அறிக்கை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில் பழங்குடியினரின் குடியிருப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அரசின் திட்டங்கள் பழங்குடியினரைச் சென்று அடைகிறதா என்பதையும், அவற்றின் பலன்கள் மற்றும் அவற்றால் அவர்களின் வாழ்வில் அடைந்த முன்னேற்ற நிலை குறித்த ஆய்வின் அறிக்கை ஆகும்.

**5. தமிழ்நாட்டில் உள்ள மாநிலப் பல்கலைக்கழகங்களின் கலை, அறிவியல் மற்றும் பொறியியல் படிப்புகளின் பருவ இறுதி தேர்வு வினாத்தாள்கள் மீதான மதிப்பீட்டாய்வு**

கலை, அறிவியல் மற்றும் பொறியியல் பாடப் பிரிவுகளின் இளநிலை பட்டப்படிப்புகளுக்கான, பல்கலைக்கழகங்களால் வடிவமைக்கப்படும் பருவ இறுதி வினாத்தாள்களின் தரத்தின் மீதான ஒரு மதிப்பீட்டாய்வு ஆகும். மாணவர்களின் கற்றல் வெளிப்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக, பருவ இறுதி வினாத்தாள்களின் தரத்தில் தேவைப்படும் மாற்றங்களை இந்த அறிக்கை விவரிக்கிறது.

**6. தமிழ்நாடு வெப்பத் தணிப்பு உத்தி**

கோடை காலம் நெருங்கி வருவதால், இந்த ஆவணம் தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டிய வெப்பத் தணிப்பு உத்திகளை தொகுத்து வழங்கியுள்ளது. இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளால் மேற்கொள்ளப்பட்ட வேண்டியவை ஆகும்.

**7. குறைந்த உமிழ்வு மண்டலம் - சென்னைக்கான செயலாக்க உத்திகள்**

மாசு உமிழ்வைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் இந்த அறிக்கை, நகரங்களில் "குறைந்த உமிழ்வு மண்டலம்" உருவாக்க வேண்டியதன் அவசியத்தை கோடிட்டுக் காட்டுகிறது. இங்கிலாந்து நாட்டில் உள்ள இதேபோன்ற செயலாக்க உத்திகளின் (Toolkit) அடிப்படையில், சென்னை போன்ற பெருநகரங்களில் இத்தகைய செயலாக்க உத்திகளை எவ்வாறு பின்பற்றலாம் என்பதை இந்த அறிக்கை விவரிக்கிறது.

**8. தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் சீமைக்கருவேல மரங்களின் மேலாண்மை**

சீமைக்கருவேல மரங்களின் பரவலைக் கருத்தில் கொண்டு, இந்த அறிக்கை வாழ்வாதார வாய்ப்புகளை சமரசம் செய்யாமல் சுற்றுச்சூழல் சீரழிவைக் குறைப்பதற்கான அறிவியல் தீர்வுகளையும், அவற்றிற்கு சாத்தியமான வழிகளையும் உத்திகளையும் பரிந்துரைக்கிறது.

**9. தமிழ்நாட்டில் வன ஆக்கிரமிப்பு இனங்களின் மேலாண்மை**

இந்த அறிக்கையில் தமிழ்நாட்டின் வனத்தை ஆக்கிரமித்துள்ள அந்நிய களை, தாவரங்கள் மற்றும் மர இனங்களை மேலாண்மை செய்வதற்கான அறிவியல், கொள்கைகள் மற்றும் சட்ட அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளது. மாநிலத்தின் வனப்பகுதிகளின் தரம் மற்றும் வளமான பல்லுயிர் பெருக்கத்தை உறுதிசெய்வதற்கான பயனுள்ள மேலாண்மை உத்திகளை இது வலியுறுத்துகிறது.

**10. தமிழ்நாட்டின் நிலையான கடற்பாசி விவசாயம் முன்னோக்கி செல்லும்வழி**

உள்நாட்டு கடற்பாசி விவசாயத்தை நிலையான முறையில் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை தெளிவுபடுத்துவதும், மேலும் தமிழ்நாட்டில் கடலோர பெண்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கும் சாத்தியமான வழிகளை முன்னிலைப்படுத்துவது இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

**11. தமிழ்நாட்டில் காடுகளின் நிலை**

இந்த அறிக்கை இந்திய வன ஆய்வு நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இந்திய வனங்களின் நிலை என்ற ஈராண்டுக்கு ஒரு முறை வெளியிடும் அறிக்கையிலிருந்து, தமிழ்நாடு குறித்த தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு ஆகும். அதனை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வறிக்கை 2001 முதல் 2021 வரை தமிழ்நாட்டில் உள்ள வனம் மற்றும் பசுமை போர்வையை பகுப்பாய்வு செய்து மாவட்ட வாரியாக ஆராய்ந்துள்ளது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

தேர்தலுடன், நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து ஆலோசிக்க உயர்மட்ட குழுவை அமைத்துள்ளனர். இதனால் தான் இந்த பா.ஜ.க வின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக தி.மு.க. அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் கருத்துக்கு எதிராக மாநில சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

**நிதி ஒதுக்குவதில் பெரும் ஏற்றத்தாழ்வு!**

மேலும், பா.ஜ.க அல்லாத மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலும் பெரும் ஏற்றத்தாழ்வு உள்ளது. நாடாளுமன்றத்தில் இந்தக் கேள்வி எழுப்பப்படும் போதெல்லாம், நிதி ஆணையத்தின் அடிப்படையில் தான் நிதி ஒதுக்கப்படுகிறது என்று சொல்வார்கள். உண்மையில், நிதி ஆணையம் அமைக்கப்பட்டு, அவற்றின் விதிமுறைகள், மாநில அரசுடன் எந்த ஆலோசனையும் இன்றி மத்திய அரசால் தீர்மானிக்கப்படுகின்றன.

வளைந்து கொடுக்கும் பரிந்துரைகளை பி.ஜே.பிக்கு ஆதரவாக அதாவது மத்திய அரசு தனக்கென விகிதாசாரமற்ற வளங்களைத் தக்கவைத்துக்கொண்டது, காலப் போக்கில் அது பகிர்ந்தளிக்கப்பட்ட மாநிலப்பங்கைக் கூடபிற்போக்குத் தனமான நிலைமைகளுக்கு உட்படுத்தியது.

இந்த விஷயத்தை மேலும் மோசமாக்கும் வகையில், செஸ் மற்றும் கூடுதல் கட்டணம் மூலம் சேகரிக்கப்பட்ட வளங்களின் பெரும்பகுதி, நிதி ஆணையத்தின் வரம்பிற்கு வெளியே வைக்கப்பட்டு, மத்திய அரசுக்கு பாகுபாடு காட்ட தடையற்ற அதிகாரத்தை அளித்தது திட்டக் குழு, தேசிய வளர்ச்சி குழு ஆகியவை ஒழிக்கப்பட்டன.

**மின்கட்டணத்தை உயர்த்த கட்டாயப்படுத்தப்பட்டது!**

ஜிஎஸ்டி-யில் இருந்து விலக்கு அளிக்கப்பட்ட மது மீதான விற்பனை வரிகள் மற்றும் எரிபொருளின் மீதான கலால் வரிகள் தவிர, மாநில அரசுகள் தங்களின் சொந்த வருவாயை உயர்த்திக் கொள்ளும் திறனையும் ஜிஎஸ்டி கடுமையாக பாதித்துள்ளது. மாநில அரசுகள் பாதிக்கும் மேலான வருவாய்க்கு இப்போது மத்திய அரசையே சார்ந்திருக்கின்றன. அவர்களின் வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய அரசும் இந்திய ரிசர்வ் வங்கியும் கடன்நிதி செலவினங்களைக் கட்டுப்படுத்த நேரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. அரசு நிதியுதவி பெற்ற கார்ப்பரேட் நிறுவனங்களால் கடன் வாங்குவதன் மூலம் கூடுதல் வரவுசெலவு வளங்களை திரட்டும் முயற்சிகள் தடுக்கப்பட்டுள்ளன.

Covid -19 தொற்று நோய்களின் போது கூட, சுகாதாரம் தொடர்பான செலவினங்களைச் சமாளிக்க மாநிலங்கள் சிரமப்பட்டபோது, மாநில அரசு நடத்தும் விநியோக நிறுவனங்களால் விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் மீதான கட்டண உயர்வு போன்ற சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்கு உட்பட்டே கூடுதல் கடன் வாங்க அனுமதித்தது பிற்போக்கான செயல் ஆகும்.

கூடுதல் கடனைப் பெறுவதற்காக, மாநிலங்களை மின் கட்டணத்தை உயர்த்துமாறு மத்திய அரசு உண்மையில் கட்டாயப்படுத்தியுள்ளது.

மாநில அரசுகள் நலத்திட்ட பணிகளுக்கு நிதியை உருவாக்குவதற்காக பல்வேறு செலவினங்களைக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வாக்காளர் ஆதரவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு ஒப்பிடக்கூடிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் விடாமல் நிற்கிறது. அதே போல் பா.ஜ.கவின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில அரசுகளும், மத்திய அரசின் சிறப்பு உதவியால் பயனடைகிறது.

இத்தகைய பாரபட்சம் போதாது என்று, சமீபத்திய விவகாரங்களால் மோசமான நிலை அடைந்துள்ளன, இப்போது பா.ஜ.க ஆட்சியில் அரசாங்கமும் மதமும் பின்னிப் பிணைந்துள்ளன. இப்போது அவர்கள் நாடு முழுவதும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை கட்டாயப் படுத்த முயற்சிக்கிறார்கள், அவர்கள் மக்கள் அல்லது மாநில அரசுகளின் கருத்தை கருத்தில் கொள்ள விரும்பவில்லை. குறிப்பிட்ட மதத்தை குறிவைத்து சட்டங்கள் ஆளும் கட்சிக்கு பிரச்சாரத்தை ஒளிபரப்புவதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**தி.மு.க. பொறுப்பேற்க வேண்டிய தருணம் இது!**

நம் தேசத்தின் கட்டமைப்பை அழிக்கும் செயல்களைச் செய்ய அவர்கள் எதை செய்யவும் துணிந்துள்ளனர். நாட்டின் எதிர்காலத்திற்காகவும், சமூக நீதி, மதச்சார்பின்மை மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்தவும் தி.மு.க பொறுப்பேற்க வேண்டிய தருணம் இது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

மறைந்த தவத்திரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள்

## தமிழைப் பரப்புவதை தமது வாழ்நாள் பணியாகக் கொண்டவர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, மார்ச் 13 -

கோவை காமாட்சிபுரி ஆதீனத் தலைவர் மறைந்த தவத்திரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள், தமிழைப் பரப்புவதை தமது வாழ்நாள் பணியாகக் கொண்டவர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

கோவை காமாட்சிபுரி ஆதீனத் தலைவர் தவத்திரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**கோவை காமாட்சிபுரி ஆதீனத் தலைவர் தவத்திரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.**

**மேற்கு மண்டலத்தில் ஆன்மீக வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டுக்காகப் பாடுபட்ட அப்பழுக்கற்ற துறவியான சிவலிங்கேஸ்வர சுவாமிகள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோவில்களுக்கு தமிழில் குடமுழுக்கு நடத்திய பெருமைக்குரியவர்.**

**தமிழைப் பரப்புவதைத் தமது வாழ்நாள் பணியாக மேற்கொண்டு வந்த அவர், பசும்பொன் தேவர் திருமகனார் நினைவிடத்தில் குருபூஜை செய்யும் உரிமையைப் பெற்றவர் ஆவார்.**

**பல்வேறு நாடுகளுக்கும் பயணம் செய்து தமிழ்மொழியைப் பரப்பி வந்த அவர், பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களைத் தங்க வைத்து, அவர்கள் கல்வி கற்க உதவிகளையும் புரிந்து வந்தார்.**

**தொண்டிலும், துறவிலும் சிறந்து விளங்கிய சிவலிங்கேஸ்வர சுவாமிகளின் மறைவு தமிழ்ச் சமயநெறிக்கும், தமிழ்மொழி வழிபாட்டிற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.**

**அவரது மறைவால் வாடும் அவரது சீடர்களுக்கும், மாணவர்களுக்கும், சமயப் பற்றாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஓமந்தூரில் நடைபெற்ற தி.மு.க. செயல் வீரர்கள் மற்றும் பாக முகவர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றி நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், மரக்காணம் ஒன்றிய துணை பெரும் தலைவரும் மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளருமான பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.




சேலம், இரயில்வே சந்திப்பில் நேற்று முன்தினம் (12.03.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், சேலம் கோட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 3 புதிய வழித்தடங்களில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, புதிய பேருந்து சேவைகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், அரசு போக்குவரத்துக் கழக துணைப் பொது மேலாளர் சிவலிங்கம் ஆகியோர் உள்ளனர்.




எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பணியாற்றிட வேண்டிய நெறிமுறைகளை வகுத்திடும் "தி.மு.க. சொற்பொழிவாளர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (12–03–2024) சென்னை, தியாகராயர் நகர், ஜி.என்.செட்டி சாலையில் உள்ள "ஓட்டல் அகார்டில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் மாநிலங்களவைக்குழுத் தலைவர் திருச்சி சிவா, எம்.பி., தலைமையில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., வரவேற்புரையாற்றிட நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்புக்குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர்கள் திண்டுக்கல் ஐ.லியோனி, முனைவர் சபாபதிமோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். – சிறப்பு அழைப்பாளராக மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக கொள்கைப் பரப்பு இணை – துணைச் செயலாளர்கள் மற்றும் கழக சொற்பொழிவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் தரும் 'மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை' இகழ்ந்து பேசும்

# நடிகை குஷ்புவுக்கு - தமிழ்நாட்டுப் பெண்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## அமைச்சர் கீதா ஜீவன் கடும் கண்டனம்!

சென்னை, மார்ச் 14-

"பா.ஜ.க.,வின் நடிகை குஷ்பு அவர்களே! அடக்கி வாசியுங்கள்! தமிழ்நாட்டுப் பெண்கள் உங்களுக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள்!" என அமைச்சர் திருமதி, கீதா ஜீவன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களை இழிவுபடுத்திய நடிகை குஷ்புவுக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான திருமதி, கீதா ஜீவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

நடிகை குஷ்பு, முதலமைச்சர் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைப் பற்றி மிக இழிவாகப் பேசியிருக்கிறார். குறிப்பாகத் தமிழ்நாடு அரசு பெண்களுக்கு வழங்கும் தொகையைப் பிச்சை போடுவதாக இழிவு படுத்தியுள்ளார். உரிமைத்தொகையைப் பெறுகின்ற அந்த ஒரு கோடியே 16 லட்சம் பெண்களையும் இழிவுபடுத்தி நடிகை



குஷ்பு பேசியிருப்பது மிகவும் வருத்தத்தைத் தருகிறது.

பெண்களுடைய வாழ்க்கை நிலையை அறியாதவர் அவர் என்பதை நாம் இதன் மூலம் அறிய முடிகிறது. அவருக்கு என்ன தெரியும்?

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள் நடுத்தர வாழ்க்கை முறை என்னவென்று தெரியுமா? அந்த ஆயிரம் ரூபாய் எவ்வளவு பயன் தருகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? ஒன்றுமே தெரியாமல் வீட்டில் இருந்து வெளியே வந்து மைக்கைப் பார்த்துப் பேசுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த மாதிரி பேசக்கூடாது. நிலை அறியாமல் நீங்கள் பேசுகிறீர்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், உங்களுக்குத் தெரியாது. மாதம் ஆயிரம் ரூபாய் என்பது உங்களுக்கு அப்படித்தான் தெரியும். நீங்கள் கோடியில் புரள்பவர். பணவசதி படைத்தவர். நீங்கள் பெரிய நடிகர். உங்களுக்கு அந்த ஆயிரம் ரூபாய் அப்படித்தான் தெரியும். ஆனால் இந்த மாதிரி ஆயிரம் ரூபாய் வைத்துக் குடும்பம் நடத்துகிற, வாழ்வாதாரத்துக்காக, ஒரு மருத்துவச் செலவுக்காக,பிள்ளைகளின் படிப்புக்காக எத்தனையோ பேருக்குப் பலன் தருகிறது.

அதனைச் சிலர் "முதலமைச்சர் எனக்குத் தரும் சீர்" என்று சொல்கிறார்கள். சில தாய்மார்கள், "என் பிள்ளைகள் என்னைப் பார்த்துக் கொள்ளாவிட்டாலும், மவராசன் முதலமைச்சர் எனக்கு ஆயிரம் ரூபாய் தந்து என்னைப் பார்த்துக்கொள்கிறார்" எனச் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு வாழ்வாதாரத்துக்கு உதவக்கூடிய உரிமைத்தொகையை நீங்கள் அசால்டா "பிச்சை போடுகிறார்" என்ற வார்த்தையைச் சொல்கிறீர்கள். பிச்சை என்பதன் அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? நீங்கள் உங்கள் போக்குக்கு வார்த்தைகளை இப்படி எல்லாம் பயன்படுத்தாதீர்கள்.

நிச்சயமாக இதற்கு எங்களுடைய தமிழ்நாட்டுப் பெண்கள் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களும் உங்களுக்கு சரியான பாடம் புகட்டுவார்கள். அவர்கள் உங்களைப் பார்த்துக் கொள்வார்கள். அடக்கி வாசியுங்கள் என்பதை மட்டும் நான் கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### புதுக்கோட்டை திருவப்பூர்

# முத்துமாரியம்மன் திருக்கோயில் தேர் திருவிழா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப் பாண்டியன் பங்கேற்றனர்!

புதுக்கோட்டை மார்ச் 14-

புதுக்கோட்டை திருவப்பூர் முத்து மாரியம்மன் திருக்கோயில் தேர் திருவிழாவில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் த சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் தி ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 11.03.2024 அன்று கலந்து கொண்டு, தேரினை வடம் பிடித்து இழுத்தார்கள்.

புதுக்கோட்டை திருவப்பூர் முத்து மாரியம்மன் திருக்கோயில் மாசிப் பெருவிழா, 25.02.2024 அன்று துவங்கிய பூச்சொரிதல் விழாவின் ஒருபகுதியாக பக்தர்களால் முத்து மாரியம்மன் திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட பூக்கள் அனைத்தும் அம்பாளுக்கு சார்த்தப்பட்டு 26.02.2024 அன்று பக்தர்களுக்கு பூக்களைப் பிரசாதமாக வழங்கப்பட்டது. அதன்படி, 11.03.2024 அன்று நடைபெற்ற தேர் திருவிழாவில், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் கலந்துகொண்டு, தேரினை வடம்பிடித்து இழுத்தார்கள். இந்த திருவப்பூர் முத்து மாரியம்மன் திருக்கோயில் விழாவானது 18.03.2024 வரை நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி , நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், ஆ.செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றிய பகுதிகளில்

# ரூ.46.00 இலட்சம் மதிப்பில் சாலை பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பபூர், மார்ச் 14-

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றியம், கொடுவாய் ஆர்.வி.எல். திருமண மண்டபத்தில் 08.03.2024 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனைப் பட்டாகளையும், 75 பயனாளிகளுக்கு நலவாரிய அட்டைகளையும், 219 பயனாளி களுக்கு மருத்துவ காப்பீடு அட்டைகள், 5 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டத்சத்து நலப் பெட்டகம், 10 பயனாளிகளுக்கு மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருத்து பெட்டகம் என மொத்தம் 334 பயனாளிகளுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகளை வழங்கி, குண்டடம் ஒன்றியம், எல்லப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.30.00 மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட கட்டடத்தை திறந்து வைத்து, பெருமாள் பாளையம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆறத்தொழுவு தீத்தான்வலசு சாலையிலிருந்து தென்னங்கரை பாளையம் வழியாக கொத்தனூர் வரை செல்லும் மண் சாலையை அடுக்கு காப்பி சாலையாக அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, குண்டடம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சிவ.செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், ஒன்றிய அவைத்தலைவர் ராசு (எ)கிருஷ்ணசாமி, பொருளாளர் நல்லசாமி, துணைச் செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், ஊதியூர் பெரியசாமி, மாவட்ட பிரதிநிதிகள் துரைசாமி, தேவராசு, மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர்கள் மணி, நந்தகுமார், பிஏபி பகிர்மான குழுத்தலைவர் கண்ணன்(எ)தெய்வசிகாமணி, பெருமாள்பாளையம் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் நந்தகுமார், காங்கேயம் வட்டாட்சியர் மயில்சாமி, குண்டடம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுரேஷ்குமார், விஜயகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மதுராந்தகம் அருகே சாலை விபத்து

# உயிரிழந்த மாணவர்கள் குடும்பத்திற்கு நிதியுதவி - ஆறுதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 14–

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகே சிறுநாகலூர் கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து அறிவிப்பு வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிறுநாகலூர் கிராமம், சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் 12.3.2024 அன்று காலை தொழுப்பேடுவிலிருந்து செங்கல்பட்டு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து முன்னால் சென்ற கண்டெய்னர் லாரியை முந்திச்செல்ல முயன்றபோது எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில், பேருந்தில் பயணம் செய்த மதுராந்தகம் தனியார் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்கள் தனுஷ் (வயது 21), த/பெ. முனியப்பன், கமலேஷ் (வயது 19), த/பெ. முருகேசன் மற்றும் மோனிஷ் (வயது 19), த/பெ.சிவகுமார் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் ரவிச்சந்திரன் (வயது 20), த/பெ.குணசேகரன் என்பவர் மதுராந்தகம் அரசுப் பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த நான்கு மாணவர்களின் பெற்றோர்களுக்கும், அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறன். ஈடுசெய்ய முடியாத இந்தப் பேரிழப்பு நம் அனைவருக்கும் ஆழ்ந்த வேதனை அளிக்கிறது. உயிரிழந்த மாணவர்களின் பெற்றோருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### தா.பழூர் மேற்கு ஒன்றிய செயலாளர்

# மறைந்த வா.சௌந்தரராஜன் இறுதி ஊர்வலம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அமைதி ஊர்வலம் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்!

அரியலூர், மார்ச், 14-

அரியலூர் மாவட்டம் தா.பழூர் மேற்கு ஒன்றிய செயலாளர் வா. சௌந்தர்ராஜன் வாகன விபத்தில் உயிரிழந்தார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து மாலை 5 மணியளவில் புறப்பட்டது, இறுதி ஊர்வலத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் ஜெகதீசன், செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, பெரம்பலூர் மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் குன்னம் சி.ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்.

சி.சந்திரசேகரன், ஒன்றியகழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், கோ.அறிவழகன், மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, இரா.மணிமாறன், ரெங்க. முருகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், நகரகழக செயலாளர்கள் இரா.முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர். இராமராஜன்,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் முகானந்தம், அருண்சிவம், சிவரமேஷ், சுரேஷ்,

மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள், ஊர் பொதுமக்கள் பலரும் ஊர்வலமாகச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

இறுதியாக மாவட்ட கழக செயலாளர், போக்குவரத்துதுறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இடுகாட்டில் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.



அரியலூர் மாவட்டம், தா.பழூர் மேற்கு ஒன்றியச் செயலாளர், மறைந்த வா.சவுந்திரராஜன் உடலுக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான சா.சி.சிவசங்கர் அஞ்சலி செலுத்தி இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றார். கழக நிர்வாகிகள், கழகத்தினர் ஏராளமானோர் இதில் கலந்துகொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டம், திருமுருகன் பூண்டி நகர கழகத்தின் சார்பில், நகராட்சி முன்புறம் அமைந்துள்ள அண்ணா திடலில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், திருமுருகன்பூண்டி நகர கழக செயலாளர் த.கிருஷ்ணமூர்த்தி (எ) மூர்த்தி முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் சிறப்புரையாற்றினார். இதில் திருமுருகன்பூண்டி நகர்மன்ற தலைவர் நா.குமார் உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# பாசிச பா.ஜ.க. வீழட்டும்...பாதுகாப்பான ‘இந்தியா’ பிறக்கட்டும்.. 9

வலிமையான பிரதமர் என்று மோடியின் மீது பா.ஜ.க. கட்டியெழுப்பிய போலி பிம்பம் சுக்கு நூறாக உடைந்து போய்விட்டது. பா.ஜ.க. வின் ஆட்சியில் குறிப்பாக, மோடியின் இந்த 10 ஆண்டுகால ஆட்சியில் இந்தியாவின் பாதுகாப்பு என்பதே மிகப்பெரிய கேள்விக்குறியாகி உள்ளது.

**போலி தேசபக்தியை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் காட்டிய பா.ஜ.க. உண்மையிலேயே தேசபக்தியோடு இந்தியாவை காக்கும் முயற்சியில் வெற்றி பெற்றதா எனில் இல்லை என்பதே உண்மை. இந்த சூழலில், பாசிச பா.ஜ.க. வின் இந்த 10 ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவின் பாதுகாப்பு எங்கெல்லாம் சிக்கலாகி உள்ளது என்பதை நாட்டு மக்களுக்கு நினைவு படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.**

2014 - ல் மோடி பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டபோது, பா.ஜ.க. வினர் வைத்த வாதம் நினைவிருக்கிறதா?. ஏன் மோடியே ஒரு பரப்புரைக் கூட்டத்தில் பேசும்போது, அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்கை மறைமுகமாக குறிப்பிட்டு, டெல்லி வலிமையாக இருந்தால்தான் எல்லை வலிமையாக இருக்கும் என்றுபேசினார். மோடியின் ஆதரவாளர்களோ மோடி ஆட்சிக்கு வந்தால் அண்டை நாடுகள் எல்லாம் மோடியைக் கண்டு அஞ்சி நடுங்கும் என்று ஆனந்தக் கூச்சலிட்டனர்.


ஆனால், மோடியின் ஆட்சியில் தேசத்திற்கு வெளியில் இருந்து வரும் ஆக்கிரமிப்புகளும் அதிகரித்துவிட்டன. தேசத்திற்கு உள்ளேயும் அமைதி சீர்குலைந்து போய்விட்டது.



**இந்திய எல்லைக்குள் ஊடுருவி சீனா கட்டியுள்ள வீடுகள்**

சீனா இந்திய எல்லைக்குள் ஊடுருவி ஒரு சிறு கிராமத்தையே அமைத்துவிட்டது. சர்வதேச நாடுகள் ஆதாரங்களுடன் புகைப்படத்துடன் அது குறித்து செய்தி வெளியிட்டன. இந்தியாவில் எதிர்க்கட்சிகள் மோடி இது குறித்து பதில் சொல்ல வேண்டும் என்று வலியுறுத்தின. ஆனால், அஞ்சா நெஞ்சர் என்று பா.ஜ.க. வினரால் புகழ்பாடப்படும் மோடியோ, சீனா என்ற வார்த்தையை உச்சரிக்கவே தயங்கினார். தயங்குகிறார். நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதிக்க மறுத்தார். எதிர்க்கட்சிகள் சீன ஆக்கிரமிப்பு குறித்து எழுப்பிய எந்தக் கேள்விகளுக்கும் பதில் சொல்ல அஞ்சி ஓடினார்.

இந்திய ராணுவ வீரர் அபிநந்தனை பாகிஸ்தான் பிடித்து வைத்தபோது, தேசமே துடித்துப்போனது. அதைக்கூட தங்கள் வாக்கரசியலுக்கு பயன்படுத்த பா.ஜ.க. முயற்சி எடுத்தபோது, பா.ஜ.க.வின்போலி தேச பக்தி முகத்திரை கிழிந்து தொங்கத் தொடங்கியது.



**இந்திய ராணுவ வீரர் அபிநந்தனை பாகிஸ்தான் ராணுவம் பிடித்து வைத்தபோது எடுத்த படம்**

இங்கே மோடி அரசின் ஊழல்களை, நிர்வாகச் சீர்கேடுகளை, மக்கள் விரோதச் சட்டங்களைக் குறித்து கேள்வி எழுப்பியோரை தேச விரோதிகள் என்று முத்திரை குத்துவது பா.ஜ.க. வின் வழக்கம். ஆனால், மோடி பிரதமரான பின் 2015 -ம் ஆண்டு இறுதியில் ரஷ்யாவிற்குச் சென்று விட்டு ஆப்கன் வந்தவர் திடீரென்று எந்த முன்னறிவிப்பும் இன்றி பாகிஸ்தான் சென்றார்.

பிரதமரின் சிறப்பு IAF போயிங் 737 விமானம் பாகிஸ்தானில் இறங்கிய பிறகுதான் இந்திய நாட்டு மக்களுக்கும் ஊடகங்களுக்குமே பிரதமர் பாகிஸ்தான் சென்றது தெரியவந்தது.

அங்கு அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பை சந்தித்து அவருக்கு பிறந்த நாள் வாழ்த்துகளையும் கூறியதோடு அவர் அளித்த விருந்தையும் உண்டு களித்தார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் 10 ஆண்டு கால ஆட்சியில் பாகிஸ்தானுக்கு இந்தியப் பிரதமர் யாரும் சென்றிடாத நிலையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பதவியேற்றதும் பாகிஸ்தான் சென்றவர் மோடி.

ஒரு வேளை மன்மோகன் சிங்கோ அல்லது பா.ஜ.க. அல்லாத வேறு பிரதமர்களோடு இப்படி முன்னறிவிப்பின்றி பாகிஸ்தான் சென்று அங்கே விருந்துண்டு வந்திருந்தால் பா.ஜ.க. அவர்களுக்கு என்ன முத்திரை குத்தியிருக்கும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.



**2015 ம் ஆண்டு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பை சந்தித்த பிரதமர் மோடி**

சீன அதிபரை இந்தியாவிற்கு அழைத்து வந்து, குறிப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து மகாபலிபுரத்தில் அவரோடு ஊஞ்சல் ஆடிய மோடியால் சீனாவின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக கண்டனக் குரல் எழுப்ப இயலவில்லை எனில்,

**தமிழ்க்கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த
ஊடகவியலாளர்



மோடியின் ஆட்சியில் இந்தியா எவ்வளவு பலவீனமாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே பா.ஜ.க. ஆட்சியில் இருந்தபோதுதான், நாடாளுமன்றத்திற்குள் நுழைய தீவிரவாதிகள் முயற்சி செய்தனர் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. நாடாளுமன்றத் தாக்குதல் நடைபெற்ற அதே டிசம்பர் 13 -ம் தேதி, புதிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்குள் புகுந்த மர்ம நபர்கள் மக்களவை நடைபெறும் அரங்கிற்குள்ளேயே புகை குண்டுகளுடன் சென்றது மட்டுமின்றி, நாடாளுமன்றத்தில் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, புகை குண்டுகளை அவைக்குள் வீசிய போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த தேசமும் அதிர்ந்து போனது.



**நாடாளுமன்றத்தில் வண்ணப்புகைக் குண்டுவீச்சு தாக்குதல்**

நாடாளுமன்றத்தையே காப்பாற்ற திராணியற்ற மோடியா நாட்டைக் காக்கப் போகிறார் என்று நாட்டு மக்கள் விழித்துக் கொண்டனர். அப்போதும் கூட நாடாளுமன்றத்திற்குள் புகுந்து, நடைபெற்ற தாக்குதல் குறித்து ஒரு வார்த்தை கூட மக்களவையில் பேச மறுத்தார் மோடி. மோடியின் ஆட்சியில் இந்தியா பாதுகாப்பற்ற சூழலில் இருக்கிறது என்பதற்கான ஆகப் பெரும் சான்று, புல்வாமா தாக்குதல்.

2019 -ம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதி 78 பேருந்துகளில் மொத்தம் 2,547 சி.ஆர்.பி.எப் வீரர்கள் ஸ்ரீநகரிலிருந்து ஸ்ரீநகர் ஜம்மு தேசிய நெடுஞ்சாலை வழியாக ஜம்மு காஷ்மீர் சென்று கொண்டிருந்தனர். ஜம்முவிலிருந்து கிளம்பிச் செல்லும் வழியில் லெத்திபோரா மற்றும் அவந்திபோரா பகுதிகளுக்கருகே சிறிய வாகனம் ஒன்று படையினரின் பேருந்து ஒன்றில் மோதி வெடித்தது.

இந்தச் சிற்றுந்தில் சுமார் 350 கிலோ வெடி மருந்து இருந்திருக்கலாம் என்பது பின்னர் விசாரணையில் தெரியவந்தது. இந்தத் தாக்குதலில் 76 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த நாற்பதிற்கும் மேற்பட்ட காவல்படையினர் கொல்லப் பட்டனர்.



**புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த வீரர்களின் உடல்கள்**

**இந்த தாக்குதல் குறித்து ஊடகங்களிடம் பேசிய அம்மாநில ஆளுநர் சத்யபால் மாலிக், இது குறித்து பிரதமர் மோடியின் மீது கடும் விமர்சனங்களை முன் வைத்தார். குறிப்பாக, தாக்குதல் குறித்து மோடியிடம் தெரிவித்தபோது, அவர் அது குறித்து எதுவும் பேச வேண்டாம் என்று தனக்கு அறிவுறுத்தியதாக குற்றம் சாட்டினார்.**

**2500 க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படை வீரர்களை சாலை வழியாக நீண்ட தூரம் இடம்பெயரச் செய்வது அவர்கள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடும் என்று தாம் முன்பே எச்சரித்ததாகவும், வான் வழியே அவர்களை அழைத்துச் செல்லலாம் என்று தான் அறிவுறுத்தியதாகவும் ஆனால், ஒன்றிய மோடி அரசு அதற்கு செவிசாய்க்காமல் போனதே நம் பாதுகாப்புப் படை வீரர்கள் 40 க்கும் மேற்பட்டோரை நாம் இழப்பதற்கு காரணம் என்று அப்போது ஆளுநராக இருந்த சத்யபால் மாலிக் சொன்ன குற்றச்சாட்டுகளை கேட்டபோது, மோடியின் ஆட்சியில் பாதுகாப்புப் படை வீரர்களுக்கே பாதுகாப்பு இல்லையா என்ற கேள்வி தேசம் முழுவதும் எழத் தொடங்கியது.**


வழக்கம் போல் மோடியின் தவறுகளைச் சுட்டிக் காட்டியதற்காக, அவர் மீது விமர்சனம் வைத்ததற்காக சத்யபால் மாலிக் வீட்டில் சி.பி.ஐ. சோதனை நடத்தப்பட்டது. மோடியை நோக்கி யாரெல்லாம் கேள்வி எழுப்புகிறார்களோ அவர்களுக்கு எதிராக, அமலாக்கத் துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறை ஆகியன ஏவப்படும். அதற்கு சத்யாபால் மாலிக்கும் தப்பவில்லை.

**போ**லி தேசபக்தியை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் காட்டிய பா.ஜ.க. உண்மையிலேயே தேசபக்தியோடு இந்தியாவை காக்கும் முயற்சியில் வெற்றி பெற்றதா எனில் இல்லை என்பதே உண்மை. இந்த சூழலில், பாசிச பா.ஜ.க. வின் இந்த 10 ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவின் பாதுகாப்பு எங்கெல்லாம் சிக்கலாகி உள்ளது என்பதை நாட்டு மக்களுக்கு நினைவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பாதுகாப்பு வீரர்களின் மீதான தாக்குதல் என்பது திடீரென்று நடைபெற்ற ஒன்றல்ல. மோடி ஆட்சிக்கு வந்தது முதலே இதுபோல் ஏராளமான சம்பவங்கள் நடைபெற்றன.

2014 -ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று மோடி பிரதமரானார். 2015 ஆம் ஆண்டில் இருந்தே இந்தியப் பாதுகாப்புப் படையின் மீது பாகிஸ்தான் ஆதரவு ஆயுதக் குழுக்களின் தற்கொலைத் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின. 2015 ஜூலை மாதத்தில் துப்பாக்கி ஏந்திய மூவர் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பேருந்து மற்றும் காவல் நிலையத்தைத் தாக்கினர்.

2016 ஜனவரியில் துப்பாக்கியுடன் பதான்கோட் வான் படை நிலையத்தில் தாக்குதல் நடந்தது.



**பதான்கோட் வான் படை நிலைய தாக்குதல்**

2016 பிப்ரவரி மற்றும் ஜூன் காலகட்டத்தில் எட்டு இராணுவத்தினர் பொம்பொரி தாக்குதலில் உயிரிழந்தனர். 2016 செப்டம்பரில் இந்திய இராணுவப் பட்டாளத் தலைமையகத்தில் நிகழ்ந்த யூரி தாக்குதலில் 19 வீரர்கள் கொல்லப்பட்டனர். 2017 டிசம்பர் 31 இல் லெத்திபோரா கமொண்டோ பயிற்சி நிலையத்தில் நடந்த தாக்குதலில் ஐந்து பாதுகாப்பு அதிகாரிகள் உயிரிழந்தனர்.

**இப்படி தொடர்ச்சியாக மோடி ஆட்சிக்கு வந்தது முதலே நம் பாதுகாப்பு வீரர்களை நாம் பறிகொடுத்துக் கொண்டிருக்கிறோம். வெளிநாட்டில் இருந்து நடைபெறும் தாக்குதல்கள் ஒருபுறம் இருக்க, உள்நாட்டிலும் மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்கள் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன.**



**மணிப்பூர் கலவரத்தின்போது பெண்கள் நிர்வாணமாக அழைத்து செல்லப்பட்டனர்**

**மணிப்பூரில் பெண்கள் கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதைப் பற்றி மோடியை நாடாளுமன்றத்தில் பேச வைக்க எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர வேண்டிய நிலை இருந்தது. அப்போதும் கூட மணிப்பூரைப் பற்றியே பேசாமல், எதிர்க்கட்சிகள் பொறுமை இழந்து வெளி நடப்பு செய்த பிறகு மணிப்பூர் குறித்து பூசி மெழுகினார் மோடி.**

**மணிப்பூரில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரின் கணவர் ராணுவ வீரர். இந்த நாட்டை எதிரிகளிடம் இருந்து காக்கும் பணியில் ஈடுபட்ட தன்னால் மதவெறியர்களிடம் இருந்து தன் மனைவியை மோடியின் ஆட்சியில் காக்க முடியவில்லை என்று கண்ணீர் சிந்தினார்.**

**மல்யுத்த வீராங்கனைகள் பா.ஜ.க. எம்பியிடம் இருந்து தங்களின் கண்ணியத்தை காத்துக் கொள்ள முடியவில்லை என்று கண்ணீர் சிந்துகின்றனர். விவசாயிகள் தங்களை பா.ஜ.க. வின் ஈவு இரக்கமற்ற காவல்துறையிடம் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை என்று கண்ணீர் சிந்துகின்றனர்.**

**தொழிலதிபர்கள் பா.ஜ.க. அமலாக்கத்துறையைக் காட்டி மிரட்டுவதாக கண்ணீர் சிந்துகின்றனர். இளைஞர்கள் வேலை இல்லா திண்டாட்டத்தால் தங்கள் எதிர்காலம் வீணாவதாக கண்ணீர் சிந்துகின்றனர்.**

**தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், இசுலாமியர்கள், கிறிஸ்தவர்கள் பா.ஜ.க. வின் மதவாத உயர்சாதியினருக்கான ஆரியவாத அரசியலால் தங்கள் சுயமரியாதையும் வாழ்வாதாரமும், வழிபாட்டு உரிமைகளும் பறிபோவதாக கண்ணீர் சிந்துகின்றனர்.**



**விவசாயிகள் போராட்டத்தில் கண்ணீர் புகைக் குண்டு தாக்குதல்**

**தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இலங்கை ராணுவத்தால், தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவதும், துப்பாக்கிச் சூட்டில் பலியாவதும் மோடியால் தடுக்கப்படவில்லை என்று மீனவர்கள் கண்ணீர் சிந்துகின்றனர். முட்டை மதிப்பெண் எடுத்தாலும் பரவாயில்லை பணம் இருந்தால் மருத்துவர் ஆகலாம். நல்ல மதிப்பெண்ணே இருந்தாலும் பணம் இல்லாவிட்டால் மருத்துவர் ஆக முடியாது என்று கொண்டு வரப்பட்ட தகுதியற்ற ‘நீட்’ தேர்வால் தங்கள் கனவுகள் கருகிப் போவதாகமாணவக் கண்மணிகள் கண்ணீர் சிந்துகின்றனர்.**

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். மோடியின் நிர்வாகத் திறமையில்லா ஆட்சியில் பா.ஜ.க. வின் சொத்து மதிப்பும், மோடியின் நண்பர்கள் சிலரின் சொத்து மதிப்புமே உயர்ந்திருக்கிறது. அவர்கள் மட்டுமே பாதுகாப்பாக இருக்கிறார்கள். மாறாக, சாமானியர்கள் முதல், ராணுவ வீரர்கள் வரை யார் ஒருவருக்கும் மோடியின் ஆட்சியில் இந்தியாவில் பாதுகாப்பு இல்லை என்பதே கசப்பான உண்மை.

**நாம் இந்த தேர்தலில் இந்த துயரங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்போம். பாசிச பா.ஜ.க. வை வீழ்த்துவோம்.. புதிய வலிமையான பாதுகாப்பான இந்திய தேசத்தை உருவாக்குவோம்.**

**(தொடரும்...)**




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறை விஜயா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, இராம. இளங்கோவன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், மாக.அலெக்சாண்டர், எஸ்.செல்வமணி, தஞ்சை மண்டல பொறுப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியம், நாரணமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட, மருதடி கிராமத்திற்கு, பெரம்பலூரில் இருந்து செட்டிக்குளம் செல்லும் அரசுப் பேருந்தை, பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பேருந்து சேவை நீட்டிப்பை சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் கொடியசைத்து துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள். சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், அரசுப் பேருந்தில் பொதுமக்களுடன் பயணம் செய்தார். இந்த நிகழ்ச்சியில், அரசுப் போக்குவரத்துக் கிளை மேலாளர் ராஜா, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், தொ.மு.ச. மாவட்டகவுன்சில் பேரவை தலைவர் கே.கே.எம்.குமார், மாவட்டப் பொருளாளர் சங்கர், நாரணமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் பத்மாவதி சந்திரன், மற்றும் ஞானசுந்தரம், விஜயகுமார், சீனிவாசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### வீட்டு மனைப் பட்டா பெற்றவர்களுக்கு

# கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள்!

## சேலம் விழாவில் அமைச்சர் கே.என். நேரு தகவல்!

சேலம், மார்ச் 14-

முதலமைச்சர் அவர்களின் அனைத்துத் திட்டங்களும் பெண்களின் முன்னேற்றத்தை நோக்கியே உள்ளன.

வீட்டுமனைப் பட்டா பெற்ற தகுதியானவர்களில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித்தரப்படும் என ரூ.19.49 கோடி மதிப்பீட்டில் 3,197 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என். நேரு தெரிவித்தார்.

சேலம், சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று முன்தினம் (12.03.2024) நடைபெற்ற அரசு விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் ரூ.19.49 கோடி மதிப்பீட்டில் சேலம், மேட்டூர், சங்ககிரி மற்றும் ஆத்தூர் ஆகிய வருவாய் கோட்டங்களுக்குட்பட்ட 3,197 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பு ஏற்றதிலிருந்து வருவாய்த்துறையின் சார்பில் தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கிட உத்தரவிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றது. அதன்தொடர்ச்சியாக, சேலம் மாவட்டத்தில் உள்ள 4 வருவாய் கோட்டங்களுக்கும் உட்பட்ட பகுதிகளில் தகுதியான பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைய தினம் நடைபெறும் இவ்விழாவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் புதிய வீடுகள் கட்டித்தரப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, இன்றையதினம் வீட்டுமனைப் பட்டா பெற்றவர்களில் தகுதியானவர்களுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சிறப்பான திட்டங்களில் ஒன்றான "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில் பெறப்பட்ட தகுதியான மனுக்களுக்கு 30 நாட்களில் தீர்வு காணப்படுகிறது. இதுமட்டுமல்லாமல், பொது மக்களின் குறைகளைக் கேட்டறியும் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின் மூலம் பொது மக்களின் பகுதிகளுக்கே நேரடியாகச் சென்று குறைகள் கேட்டறிப்பட்டு, தீர்வு காணப்பட்டு வருகிறது. "நீங்கள் நலமா" என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்து, நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகளிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் தொலைபேசி வாயிலாக உரையாடினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனைத்துத் திட்டங்களும் பெண்களின் முன்னேற்றத்தை நோக்கியே உள்ளன. குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 1.15 கோடி மகளிர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு மாநிலங்களில் இத்திட்டத்தினை வரவேற்கிறார்கள்.

சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டுவரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து ஒடிசா மாநிலத்திலிருந்து அலுவலர்கள் வருகைபுரிந்து நாள்தோறும் விதவிதமான மற்றும் சத்தான உணவு தயாரிக்கும் முறைகள் குறித்து பார்வையிட்டுச் செல்லும் வகையில் மிகச்



சிறந்த ஆட்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான பணியை அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், இன்றையதினம் அனைத்து வருவாய் கோட்டங்களிலிருந்தும் வீட்டுமனைப் பட்டாக்களை பெறும் பயனாளிகளை சிறந்த முறையில் அழைத்துவந்துள்ள வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோருக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவிப்பதுடன், இந்த அரசு எப்பொழுதும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ள பயனாளிகள் சிறந்த முறையில் இதனைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் வாழ்வில் மென்மேலும் முன்னேற வேண்டும். இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்கள்.

இன்றைய தினம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் வாயிலாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 3,197 பயனாளிகளுக்கு ரூ.19.49 கோடி மதிப்பிலான வீட்டு மனைப் பட்டாக்களும், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் 475 நபர்களுக்கு ரூ.2.25 கோடி மதிப்பிலான மாற்றுத்திறனாளிகள் நல உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சேலம் மாநகராட்சியின் சார்பில் பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ரூ.2.15 கோடி மதிப்பிலான 12 புதிய டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்களும், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ், மாநகராட்சியின் பங்களிப்புடன் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் 36 மாநகராட்சி நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகளுக்கான ஆணை என மொத்தம் 3,708 பயனாளிகளுக்கு ரூ.26.89 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு வழங்கினார்கள்.

இதனைத்தொடர்ந்து, சேலம், இரயில்வே சந்திப்பு அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சேலம் கோட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து மகாபலிபுரத்திற்கு ஒரு புறநகரப் பேருந்தும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு அடிவாரத்திற்கு 2 சாதாரண கட்டண நகரப் பேருந்துகளும் என மொத்தம் 3 புதிய வழித்தடங்களில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பேருந்து சேவைகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, மாநகராட்சி துணை மேயர் திருமதி. மா.சாரதாதேவி, மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, வருவாய் கோட்டாட்சியர்கள் அம்பாயிரநாதன், திருமதி ந. லோகநாயகி, செல்வி.தா. பிரியதர்ஷினி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி அ. மயில், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எஸ். டி.கலை அமுதன், மாமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், சோனா கல்லூரி தாளாளர் வள்ளியப்பா மற்றும் தொடர்புடைய அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அளவிலான கபடி போட்டி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் முனைவர். தங்கபாண்டியன் ஏற்பாட்டில், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் பிரண்ட்ஸ் டி.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. போட்டிக்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கு சுழல் கோப்பை மற்றும் பரிசு தொகையினை வழங்கினார். இதில் பேரூர் கழக பொறுப்பாளர் ந. சண்முகம், ஒன்றிய கழகச் செயலாளர் சித்தார்த்தன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஏற்காடு ரமேஷ் பாபு, மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் முனைவர் வரத. ராஜசேகர், மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு அணி அமைப்பாளர் சையது சாவலி, நகர துணை செயலாளர் கலிவரதன், பேரூர் மன்ற கவுன்சிலர்கள் நடராஜன், திருச்செல்வம், ரமேஷ், நித்தியா செந்தில்குமார், செந்தில், சமீனா பேகம், காவியா சேகர், டெல்லி (எ)ராஜகோபால், பெருமாள், சந்ரு, முரளி, வித்தியாசாகர், சதீஷ் ,வெங்கடேசன், ராபின், ரவி, இளைஞர் அணி வினோத், கண்ணன், அஷென்பாசா, மஜார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற

# முதல்வர் மு.க.ஸ்டாலினை கண்டு பிரதமர் மோடி நடுங்குகிறார்!

## மரக்காணம் மேற்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டத்தில் செஞ்சி மஸ்தான் பேச்சு!

திண்டிவனம், மார்ச் 14-

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் கண்டு பிரதமர் மோடி நடுங்குவதாக மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் BLA 2, BLCமுகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஓமந்தூரில் நடைபெற்றது.

மரக்காணம் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் குமார் தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் சரவணன், ரவிக்குமார், மீனா குமாரி, முருகன், ஆதிகேசவன், ராமமூர்த்தி, தேவதாஸ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மரக்காணம் ஒன்றிய துணைபெருந்தலைவரும் மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளருமான பழனி அனைவரையும் வரவேற்றார்.

செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் உயர்கல்வியில் 52 சதவீதம்பெற்றுள்ளோம். ஆனால் பிரதமர் மோடி முதலமைச்சராக இருந்த குஜராத் மாநிலத்தில் உயர் கல்வி நிலை வெறும் 24 சதவீதம் தான் உள்ளது.

மோடி ஆட்சி செய்கின்ற மாநிலத்தில் கூட உயர்கல்வியை உயர்த்த முடியவில்லை என குற்றம் சாட்டிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற முதலமைச்சரை கண்டு பிரதமர் மோடி நடுங்குகிறார் அதனால் தான் தமிழ்நாட்டிற்கு என்றைக்கும் இல்லாத அளவிற்கு மூன்று மாதத்தில் அடிக்கடி வந்து சென்று மக்களை ஏமாற்றி வருகிறார்.

தேர்தலின் போது தமிழ்நாட்டில் உள்ள மகளிர்களுக்கு உரிமை தொகை ஆயிரம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

இதை வழங்கக்கூடாது, இலவச திட்டங்கள் கொடுக்கக் கூடாது என்று சொன்ன பிரதமர் மோடி தமிழ்நாட்டை பார்த்து,முதலமைச்சரின் திட்டங்களை பார்த்து அவர் காப்பி அடித்து மற்றொரு மாநிலத்தில் பி.ஜே.பி. கட்சிவெற்றி பெற வேண்டும் என்பதற்காக தேர்தல் வாக்குறுதி கொடுத்து தமிழ்நாட்டை வஞ்சித்தவர் பிரதமர் மோடி .

தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டங்களையும் சொல்லாத திட்டங்களையும் செயல்படுத்துவதற்காக இரவு பகல் பாராமல் தமிழ்நாட்டு மக்களுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் உழைத்து வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.



தொடர்ந்து செயல் வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்ற ஒன்றியத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகள், BLA 2,

BLC,மற்றும் கழக நிர்வாகிகள் என 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

கூட்டத்தில்.தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71வதுபிறந்த நாளை முன்னிட்டு மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் உள்ள 22 ஊராட்சிகளிலும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது, தொடர்ந்து 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது ,அனைத்து ஊராட்சிகளிலும் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணை பிரச்சாரத்தை மேற்கொண்டும்,

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் முதலமைச்சர் அறிவிக்கும் வேட்பாளர்க்கு தீவிரமாக பணியாற்றி அவரை வெற்றி பெற செய்வது,உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர்விஜயன் மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் திருமலை,ஒன்றிய கவுன்சிலர்கள் அமுதா கிருஷ்ணமூர்த்தி, கன்னியம்மாள், நாகஜோதி கணேஷ், திருநாவுக்கரசு, மகாலட்சுமி காளிதாஸ், விநாயகம், தேசம் பாலா, தேவி ராஜதுரை, துர்கா தேவி கலைஞர் ,விஜயா பெருமாள்.

நிர்வாகிகள் வடிவேல், செந்தில்குமார், ராஜாங்கம், ரவிச்சந்திரன், செந்தாமரை, கதிர்வேல், கிருஷ்ணமூர்த்தி, வேலாயுதம், கன்னியப்பன், மாரி, ஐ. கே .எஸ் .ஆறுமுகம், சிவகுமார், அய்யனார், எழிலரசன், ரவி, சசிகுமார், முனுசாமி, தர்ம கொடி. செல்லக்கண்ணு, ராஜகோபால், அரங்கநாதன், அருமைச் செல்வன், பாலசுந்தரம், கிருஷ்ணன், முருகம்மாள் ,பாலு, வளர்மதி, சேகர், பிரகாஷ், கோபி, வெங்கட், ராஜா, பெரியசாமி, ராதாகிருஷ்ணன், மேஸ்திரி ஏழுமலை, சங்கர், மல்லிகா முருகன், கமலா முருகன், ஆதிமூலம், நாகராஜன், முத்துக்குமரன், அவ்வைசேகர், முருகன், ஓமந்தூர் கிளை நிர்வாகிகள் மணிகண்டன், ராஜாராமன், சம்பத், நாகராஜ், ஜெயபால் ,மூர்த்தி, குமார், செல்வம், நரசிம்மலு, சுரேந்த்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.ஓமந்தூர் கிளை கழக செயலாளர் மணிகண்டன் நன்றி கூறினார்.

### ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில்

# 197 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார்

கள்ளக்குறிச்சி மார்ச் 14.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதி சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம் புதுப்பட்டு ஊராட்சியில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, இதற்கு கோட்டாட்சியர் லூர்துசாமி,தாசில்தார் குமரன்,ஒன்றிய கழக செயலாளர்கள் வழக்கறிஞர் அசோக் குமார்,பெருமாள், துரைமுருகன்,ஒன்றிய குழு துணை தலைவர்கள் சென்னம்மாள், அண்ணாதுரை,அஞ்சலை கோவிந்தராஜ்,மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர், ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா தாஸ் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்,வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு 197 பேருக்கு ரூபாய் 1 கோடியே 11 லட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். அப்போது அவர் பேசுகையில் நமது தமிழக அரசு மக்களுக்கான அரசாக செயல்பட்டு வருகிறது, எனவே பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக எழுதி அதிகாரிகளிடம் வழங்குங்கள் அதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்படும்,மேலும் தமிழக முதல்வர்,கழக தலைவர்,சமூக நீதி காவலர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் ஆட்சி புரியும் முதல்வருக்கு எல்லாம் முதல்வராக முன் மாதிரியாக திராவிட மாடல் ஆட்சியை சிறப்பாக நடத்தி வருகிறார், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான் திராவிட மாடல் அரசின் கொள்கையாகும்,கடந்த 10 ஆண்டுகளில் இந்த மாவட்டத்தில் நடைபெற்ற வளர்ச்சி பணிகளை விட கடந்த இரண்டரை ஆண்டுகளில் 200 மடங்கு கூடுதலாக வளர்ச்சி திட்ட பணிகளும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன,எனவே இதில் பயன் பெரும் பயனாளிகள் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க.வுக்கும் தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்கும் ஆதரவு தர வேண்டும் என்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர்கள் அர்ச்சனா காமராஜன், ஷீலா ராஜேந்திரன்,பரமசிவம் பிலோமினால்,இருதயராஜ்,ஒன்றிய கவுன்சிலர்கள் விமலா பாண்டுரங்கன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் விஜய் ஆனந்த் மற்றும் அரசு அதிகாரிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய,கிளைக் கழக தி.மு.க. நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதி சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம் புதுப்பட்டு ஊராட்சியில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது,இதற்கு கோட்டாட்சியர் லூர்துசாமி, தாசில்தார் குமரன், ஒன்றிய கழக செயலாளர்கள் வழக்கறிஞர் அசோக் குமார்,பெருமாள், துரைமுருகன், ஒன்றிய குழு துணை தலைவர்கள் சென்னம்மாள், அண்ணாதுரை,அஞ்சலை கோவிந்தராஜ்,மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர், ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா தாஸ் வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்,வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 197 பேருக்கு ரூபாய் 1 கோடியே 11 லட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார், இதில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க மற்றும் விளையாட்டு உபகரணங்களை வாங்க 17 வீரர், வீராங்கனைகளுக்கு ”TN Champions Foundation அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 56.55 லட்சத்திற்கான காசோலையினை வழங்கி குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’ நிதியிலிருந்து

# விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.64.55 லட்சம்!

## காசோலையினை - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 14-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 64.55 லட்சத்திற்கான காசோலையினை விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2024ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெறவுள்ள உலக பல்கலைக்கழக கைப்பந்து போட்டியில் கலந்து கொள்ள உள்ள நான்கு விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு தலா ரூ.3.09 லட்சத்திற்கான காசோலையினையும் ஆசிய தகுதிப் போட்டியில் பங்கேற்கவுள்ள எ.லின்சியாவிற்கு ரூ.2.20 லட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

மேலும் பல்வேறு பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள 7 பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பாரா விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ. 36.69 லட்சத்திற்கான காசோலையினையும் மற்றும் பாராஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள சதாம் ஹுசைனிற்கு ரூ. 2.20 லட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

இரண்டு விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக தலா ரூ.70,000 மதிப்பிலான காசோலை-பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க 2 வீரர், வீராங்கனை களுக்கு ரூ. 1.70 லட்சத்திற்கான காசோலை என மொத்தம் 17 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு ரூ.56.55 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

மேலும் அரசு ஆரம்பப் பள்ளிகளில் 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் ஓடி விளையாடு உடற்கல்வித் திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 8 லட்சத்திற்கான காசோலையினை ஓடி விளையாடு பல்நோக்கு பயிற்சி மைய நிர்வாகத்திடம் “TN Champions Foundation“ அறக்கட்டளை நிதியிலிருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு ஆரம்பப் பள்ளிகளில் 3 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் ஓடி விளையாடு உடற்கல்வி திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 8 லட்சத்திற்கான காசோலையினை ஓடி விளையாடு பல்நோக்கு பயிற்சி மைய நிர்வாகத்திடம் ”TN Champions Foundation அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் வே. மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தனர்.

### மணலி மண்டலத்தில்

# ரூ.238.52 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணி!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,மார்ச் 14-

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.238.52 கோடி மதிப்பீட்டில் மணலி மண்டலம், வார்டு - 15 இடையன்சாவடி, வார்டு - 16, சடையன்குப்பம் மற்றும் காடப்பாக்கம் பகுதிகளில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், மேற்கண்ட பகுதிகளில் 72.77 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 500 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 22.65 கி.மீ. நீளத்திற்கு 150 மி.மீ முதல் 700 மி.மீ. விட்டமுடைய கழிவுநீர் விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் 10.03.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2921 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 3 துணை உந்து நிலையங்கள், 8 சாலையோர உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 5.61 மில்லியன் லிட்டர் கழிவுநீர் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம், இடையன்சாவடி, சடையன்குப்பம் மற்றும் காடப்பாக்கம் பகுதிகளில் உள்ள 262 தெருக்களில் 4000 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு 46,730 பொதுமக்கள் பயன் பெறுவர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னை மே தினப் பூங்கா

# விளையாட்டு மைதானத்தை மேம்படுத்த பணிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 14-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.03.2024) சென்னை, சிந்தாரிப்பேட்டை, மே தின பூங்காவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மே தின பூங்கா விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துவதற்காக அடிக்கல் நாட்டி பணிகளைத் துவக்கி வைத்தார்.

சென்னை, சிந்தாதிரிபேட்டையில் 3.73 ஏக்கர் பரப்பளவு கொண்ட மே தின பூங்கா விளையாட்டு மைதானத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உடற்பயிற்சி மற்றும் பொழுது போக்கிற்காக மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.

மேலும் சிந்தாதிரிபேட்டை மே தின பூங்கா அருகிலுள்ள பள்ளிகள் மற்றும் உள்ளூர் சமூகத்தை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டு, பல்வேறு நவீன விளையாட்டு வசதிகளை வழங்குகிறது. இவ்விளையாட்டு மைதானமானது, தனி நபர்கள் மற்றும் சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதோடு சமூக ஒருங்கிணைப்பை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்விளையாட்டு மைதானத்தில் இரண்டு பூப்பந்து உள்விளையாட்டு அரங்கம், 100 பார்வையாளர்கள் அமர்வதற்கான இருக்கைகளுடன் கூடிய சறுக்கு வளையம், 50 முதல் 75 வரை பார்வையாளர்கள் அமர்வதற்கு ஏற்ற குத்துச்சண்டை வளையம், பொழுதுபோக்கு மற்றும் இருக்கைகளுடன் கூடிய பசுமை பகுதிகள், 6 வலை பந்தாட்ட மைதானம், அனைத்து வயதினருக்கான நடைப்பயிற்சி மற்றும் ஓடுதள பாதைகள், கிரிக்கெட் மற்றும் கால்பந்து போன்ற பல்வேறு விளையாட்டுகளுக்கான மைதானம் மற்றும் பயிற்சி நோக்கத்திற்காக 3 பயிற்சி வலைகள் ஆகியவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், வாகனங்கள் நிறுத்துமிடம், குடிநீர், கழிப்பறைகள் மற்றும் இதர அத்தியாவசிய வசதிகளை கொண்ட மைதானமாக அமையவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத்தலை வர்கள் எஸ்.மதன்மோகன், ப.ஸ்ரீராமலு, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் ராஜ மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ரா.ஜெகதீசன், அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தமிழ்நாடு

# அரசின் மக்கள் நலத்திட்டங்களை விளக்கும் புகைப்படக் கண்காட்சி

## பெரம்பலூர் நகராட்சித் திடலில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கிவைத்தார்!

பெரம்பலூர் , மார்ச் 14-

பெரம்பலூர் நகராட்சித் திடலில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் புகைப்படக் கண்காட்சியினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று இரண்டரை ஆண்டு ஆனதை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் ஏழை எளிய மக்களின் தேவைகளை அறிந்து செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விளக்கிடும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் புகைப்படக் கண்காட்சியை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்தப் புகைப்படக் கண்காட்சி ஒருவார காலத்திற்கு தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிய நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிய புகைப்படங்கள் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன.

தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை என பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் தனித்தனி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட வரும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் பாரம்பரிய உணவுத் திருவிழா, மகளிர் திட்டத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தயாரித்த உணவுப்பொருட்கள், மூலிகைத் தேநீர் பொடி உள்ளிட்ட பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளது. அரசுத்துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

குறிப்பாக இந்தக் கண்காட்சியில் ”முதலமைச்சருன் சுய புகைப்படம்” (sefi with CM) என்ற தலைப்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தின் அருகில் நின்று போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். புகைப்படக்கண்காட்சியினை பார்வையிட வந்த பொதுமக்களும், சிறுவர் சிறுமியர்களும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படத் தின் அருகில் நின்று ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் வருவாய்த் துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளையும், வேளாண்மைத் துறையின் சார்பில் தலா ரூ.1.40லட்சம் மதிப்பிலான ரொட்டோ வேட்டர் வேளாண் கருவிகளை 5 நபர்களுக்கும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் ரூ.18 லட்சம் மதிப்பில் வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டத்தின் மூலம் வேளாண் கருவிகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் தலா ரூ.87,500 வீதம் வெங்காய சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கான ஆணையினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள், மூன்று சக்கர வண்டிகள் என மொத்தம் 40 பயனாளிகளுக்கு ரூ.52.30 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் வழங்கினார்.

இதில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷ்யாம்ளா தேவி, மாவட்ட ஊரக பெரம்பலூர் நகர்மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), பேரூராட்சி தலைவர்கள் சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்), ஏ. எஸ்.ஜாஹிர் உசேன் (லெப்பைக்குடிக்காடு), பாக்கியலட்சுமி செங்குட்டுவன் (பூலாம்பாடி), வள்ளியம்மை ரவிச்சந்திரன் (அரும்பாவூர்), மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் முத்தமிழ்செல்வி மதியழகன், நகர்மன்ற துணைத் தலைவர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் மருத்துவர் அ. கருணாநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள்

# BLA2, தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய செயலாளர்கள் - நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கிருஷ்ணகிரி, மார்ச் 14-

கிருஷ்ணகிரிமேற்குமாவட்டக் கழகச் செயலாளர் ஒய். பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூர், தளி மற்றும் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதியை சார்ந்த மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதியை சார்ந்த வாக்குசாவடி ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, தொகுதி பொறுப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

இன்று (14.03.2024) காலை 9 மணி - SAS திருமண மண்டபம் - சூளகிரி- வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி, காலை11 மணி- சப்தகிரி-திருமண மண்டபம்-தேன்கனிக்கோட்டை -தளி சட்டமன்ற தொகுதி, மாலை 3 மணி-மீரா மஹால் ஒசூர்-ஒசூர் சட்டமன்ற தொகுதி. எனவே மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அந்தந்த மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் இந்த ஆலோசனை கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழகச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

# 6 மாநகராட்சிகளில் செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன் அமைத்தல்!

சென்னை, மார்ச் 14-

தூய்மை இந்தியா திட்டத்தின் (ந) தொடர்ச்சியாக, நீடித்த நிலையான தூய்மைப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் தூய்மை இந்தியா திட்டம் (ந)2.0 தொடங்கப்பட்டது.

9 மாநகராட்சிகளில் செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன்கள் அமைக்கும் செயல் திட்டத்திற்கு, 2023 - 2024 சட்டமன்ற மானிய கோரிக்கையின் போது நகராட்சி நிர்வா கத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

**(2023 - 2024 அறிவிப்பு)**

“மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், தஞ்சாவூர், நாகர்கோவில் மற்றும் தாம்பரம் ஆகிய 9 மாநகராட்சிகளில், உயிரி எரிவாயு தயாரிக்க, பொது - தனியார் பங்களிப்புடன் தினமும் 930 MT திறன் கொண்ட புதிய Bio - CNG ஆலைகள் அமைக்கப்படும்”.

இதனைத் தொடர்ந்து, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில் மற்றும் தாம்பரம் ஆகிய 6 மாநகராட்சிகளில், தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership) செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன் அமைக்கும் பணியினை ரூ.288.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள்.



புதுக்கோட்டை நகராட்சி, கலைஞர் நூற்றாண்டு பூங்காவில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில், தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல்தடுப்புசட்டத்துறைஅமைச்சர்எஸ்.ரகுபதி,மாவட்டஆட்சித்தலைவர்திருமதி.ஐ.சா.மெர்சிரம்யா, தலைமையில்11.03.2024 அன்று திறந்து வைத்து, பார்வையிட்டார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, நகர்மன்றத் தலைவர் திருமதி. திலகவதி செந்தில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி.க.பிரேமலதா, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கடலூர் மாவட்டம், நேற்று முன்தினம் (12.03.2024) 15வது மான்ய நிதிக்குழு திட்டத்தின் கீழ் குறிஞ்சிப்பாடி, அண்ணாமலைநகர், புவனகிரி, கிள்ளை மற்றும் சேத்தியாத்தோப்பு பேரூராட்சிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்கு பொது சுகாதார வாகனங்களை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் மேற்கு பகுதி, 64 (அ) வட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புகழரங்கம் 64 (அ) வட்டக் கழகச் செயலாளர் எம்.டி.தமிழ்செல்வன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பகுதிச் செயலாளர்கள் எ.நாகராஜன் எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன் மற்றும் கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சசிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், சம்பத்பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரை கண்ணன், ஆர். எஸ்.சித்திக், ம.அசோக்குமார், இரா.தயானன், எம்.சார்லஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சுரி, செ.முருகன், எம்.ஜெ.சி.பாபு, பி. அதிபதி, என்.சௌந்தர்ராஜன், என்.பவுல்ராஜ், என்.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏ.எம்.ராஜசேகர், ஆர். மோகனசுந்தரம், அ.கன்னியப்பன், ஜி.தனராஜ், எல்.ராமச்சந்திரன், பி.அல்லி ராஜன், எல்.பி.எப்.எ.பாபுராஜ், ஐ.சி.எப்.டி.வாசுதேவன், எஸ். உமா மகேஸ்வரி, பி.டி.சி.ஜெ.மகேந்திரன், எம்.பாலமுருகன், ஏ.என்.மோகன் ராஜ், வி.எம்.பழனிவேலன், டி.கருணாகரன், எஸ்.சிவகுமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர். இக்கூட்டத்தில் நாவுக்கரசர் நாஞ்சில் சம்பத், நடிகர் பொன்வண்ணன், இயக்குனர் பாண்டியராஜன் ஆகியோர் புகழுரை ஆற்றினர். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், கொளத்தூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் இரா.விடுதலை மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக தோழர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஏ.கிருபாகரன், ஜெ.ஹரிஹரன் ஆகியோர் நன்றி கூறினார்.

### கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் - இரயில் நிலையம்!

# ரூ.79 கோடி மதிப்பில் புதிய நடை மேம்பாலப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 14 -

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய ஜி.எஸ்.டி. சாலையின் குறுக்கே மற்றும் கிளாம்பாக்கம் இரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் ரூ.79.00 கோடி மதிப்பீட்டில் புதிய நடை மேம்பாலம் அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்து மற்றும் ரூ.12.80 கோடி மதிப்பீட்டில் புதிய பூங்காவை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (12.3.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய ஜி.எஸ்.டி. சாலையின் குறுக்கே மற்றும் கிளாம்பாக்கம் இரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் ரூ.79.00 கோடி மதிப்பீட்டில் 220 மீட்டர் நீளத்தில் புதிய நடைமேம்பாலம் அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்து மற்றும் இம்முனையத்தில் 6 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நீரூற்றுகளுடன் கூடிய புதிய பூங்காவை திறந்து வைத்தார். கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இருந்து புதிதாக அமைக்கப்பட உள்ள கிளாம்பாக்கம் ரயில் நிலையத்திற்கு பயணிகள் எளிதில் சென்று சேரும் வகையிலும், பேருந்து நிலையத்திற்கு முன்பாக பாதசாரிகள் ஜி.எஸ்.டி. சாலையினை பாதுகாப்பாக கடக்கும் வகையிலும் ஒரு நடைமேடை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூபாய் 79 கோடி ஆகும்.

இந்நடைபாதை சுமார் 220 மீட்டர் நீளத்தில் ஜிஎஸ்டி சாலையின் குறுக்கே அமைக்கப்பட உள்ளது. இதில் 8 மீட்டர் அகலத்தில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் நடந்து செல்வதற்கான அமைக்கப்படும். மேலும் எஸ்கலேட்டர்கள், மின் தூக்கிகள், படிக்கட்டுகள் ஆகியவையும் அமைக்கப்பட உள்ளது. இப்பணிகளை அடுத்த 12 மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுற்றவுடன் புதிதாக அமைக்கப்பட உள்ள கிளாம்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து நூற்றாண்டு பேருந்து நிலையத்திற்கு பயணிகள் எளிதாக வந்து செல்ல இயலும்.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் பொழுது போக்கிற்காகவும், பசுமை பரப்பினை ஏற்படுத்தும் பொருட்டும் ரூபாய் 12.80 கோடி செலவில் சுமார் 6 ஏக்கர் பரப்பளவில் ஒரு நீரூற்று பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டு கடந்த ஆண்டு ஜூன் மாதம் பணிகள் துவக்கப்பட்டு கடந்த நவம்பர் 2023 இல் பணிகள் முடிக்கப்பட்டன. இப்பூங்காவில் பொதுமக்களுக்கான புத்துணர்ச்சியூட்டும் நடைபாதைகள், அலங்கார பூச்செடிகள், அமரும் பலகைகள், குழந்தை களுக்கான நீர் ஊற்று, சதுரங்க சிற்பங்கள், பாறை பூங்கா, குளம், கால்வாய்கள், இரவு நேரங்களில் வண்ணமயமான விளக்குகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார், தலைமை நிர்வாக அலுவலர் (ம) மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பார்த்தீபன், கண்காணிப்பு பொறியாளர் (பொ) பாலமுருகன், செயற்பொறியாளர் ராஜன்பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து

# தேர்தல் பத்திர விவரங்கள் சமர்ப்பிப்பு!

## தேர்தல் ஆணையத்திடம் – இந்திய ஸ்டேட் வங்கி வழங்கியது!

புதுடெல்லி, மார்ச்.14 -

உச்சநீதிமன்ற உத்தரவை தொடர்ந்து தேர்தல் பத்திர விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் இந்திய ஸ்டேட் வங்கி அளித்துள்ளது.

கடந்த 2018 ஆம் தேதி பிப்ரவரி மாதம் தேர்தல் பத்திரங்கள் திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்தது. தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் அடையாளங்களை வெளிப்படுத்தாமல், அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்க இத்திட்டம் அனுமதி அளிக்கிறது.

இத்திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என்றும் இதன் மூலம் முறைகேடுகள் நடக்க வாய்ப்புள்ளதாகவும் கூறி உச்ச நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு, தேர்தல் பத்திர திட்டம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என கடந்த மாதம் 15ஆம் தேதி தீர்ப்பளித்தது. மேலும், 2019 ஏப்ரல் 12ஆம் தேதி முதல் தற்போதுவரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் எவ்வளவு நிதி பெற்றுள்ளன? என்ற விவரத்தை மார்ச் 6ம் தேதிக்குள் எஸ்.பி.ஐ தாக்கல் செய்ய வேண்டும் எனவும், இதனை மார்ச் 13ஆம் தேதிக்குள் தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால், இந்த விவரங்களை வெளியிடாமல் ஜூன் 30ஆம் தேதிவரை கால அவகாசம் வழங்குமாறு இந்திய ஸ்டேட் வங்கி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த மனு விசாரணைக்கு வந்த போது, ஸ்டேட் வங்கியின் கோரிக்கையை ஏற்க நீதிபதிகள் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். நாட்டின் மிகப் பெரிய வங்கியால் இந்த தகவல்களை சேகரித்து வழங்க இயலாதா?, இந்த பணியை செய்ய 26 நாட்கள் அவகாசம் போதாதா? என என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பிய நீதிபதிகள், தேர்தல் பத்திர விவரங்களை 24 மணி நேரத்திற்குள் தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. தாக்கல் செய்ய வேண்டும் என்றும், மார்ச் 15ஆம் தேதி மாலை 5 மணிக்குள் தேர்தல் ஆணையம் இதனை இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த தவறினால் எஸ்.பி.ஐ. அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் நீதிபதிகள் எச்சரித்தனர்.

இந்நிலையில், தேர்தல் பத்திர விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. அளித்தது. இதனை தேர்தல் ஆணையமும் உறுதி செய்துள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் ரூ.2.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் புதிய கட்டிடத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் ஆகியோர் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 92 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.92.47 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரினை வழங்கினார்கள். உடன் போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் அ.சண்முகசுந்தரம், மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வி.ஜி. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், இணை போக்குவரத்து ஆணையர் ஏ.ரவிச்சந்திரன், திருவள்ளூர் மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலர் சீனிவாசன், ஒன்றிய கழக செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் உள்பட பலர் உள்ளனர்.



சேலம், சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று முன்தினம் (12.03.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 3,197 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி ஆகியோர் உள்ளனர்.

### நீடாமங்கலம் வெள்ளையாற்றில்

# ரூ.2.38 கோடி மதிப்பில் பாலம் திட்டப் பணி!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அடிக்கல் நாட்டினார்! பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார்!

திருவாரூர், மார்ச் 14 -

மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நீடாமங்கலம் ஆய்குடி வெள்ளையாற்றில் மக்களின் கோரிக்கையை ஏற்று 2.38 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கும் பணிகளுக்கு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அடிக்கல் நாட்டினார். சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதலவர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி திருவாரூர் மாவட்டத்திலும் பல்வேறு நலத்திட்டங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது. மன்னார்குடி சட்டமன்ற தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக மன்னார்குடி மக்களுக்கு கொடுத்திருந்த வாக்குறுதிகளில் அனைத்தையும் நிறைவேற்றிட டி.ஆர்.பி.ராஜா முனைப்புடன் செயலாற்றி வருகிறார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பல்வேறு நலப்பணிகளை துவக்கிவைத்தார். நீடாமங்கலம் ஒன்றியம் ஆய்குடி மக்கள் தங்கள் தேவைகளுக்கு வெளியூர் செல்ல 4 கிலோமீட்டர் பயணித்து வெள்ளை ஆற்றை கடந்துவர வேண்டிய சூழலில் , தங்களுக்கு பாலம் கட்டித்தர தமிழ்நாடு அரசிடம் கோரிக்கை அளித்து இருந்தனர்.

இந்த கோரிக்கையை தாயுள்ளத்தோடு பரிசீலித்த முதல்வர் தளபதி அவர்கள் வெள்ளை ஆற்றின் குறுக்கே அணை கட்ட ஆணையிட்டதை அடுத்து அந்த பணிகளுக்கு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ,மாவட்ட ஆட்சியர் சாருஶ்ரீ மற்றும் ஒன்றிய பெருந்தலைவர் சோம. செந்தமிழ் செல்வன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் கேவிகே ஆனந்த, கவியரசு, மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணி சேகர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ராணி சுந்தர், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ராஜலேட்சுமி, ஜெனிட்டா ,ஊராட்சி மன்ற தலைவர் கவிதா ஶ்ரீ மற்றும் அரசு அதிகாரிகள்,பொதுமக்கள் பங்கேற்றனர்.

### மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

# வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, மார்ச் 14 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறை விஜயா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டம் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.சிவபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்லசேது. ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், என்.இளையபெருமாள், மங்கை எம். சங்கர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், ஞான.இமையநாதன், ப.முருக மணி, கு. வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ. கபிலன், பி.சிவதாஸ், சங்கரநாராயணன், நத்தம் வின்சென்ட், ஹர்சத், அ.காந்தி, எம்.பி.கென்னடி, சுபா. நெடுஞ்செழியன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம். சம்சுதீன், எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, என். அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே. மருது, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்காபரமேஸ்வரிராஜசேகர், ஒன்றியக் குழு தலைவர்கள் கமலஜோதிதேவேந்திரன், கே.மகேந்திரன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வி.என்.என்.செந்தில், ஆர்.முருகன், காளி. தேசப்பன், திபா சத்தியேந்திரன், வெடிபாலமுருகன், இரா.மனோகரன், ஆர். தன்ராஜ், டி.ராஜ்குமார், சாந்தி, அறிவழகன், எஸ். பாலாஜி, கே.விக்னேஷ், எம்.எஸ்.முத்து குபேந்திரன், வை.சௌமியன், இரா.முருகப்பா, ஆர். எஸ். ஶ்ரீதர், வைத்தியநாதன், டி.ராஜ்குமார், செல்வராஜ், பெருவீரமணி, இரா. கனகராஜ், பிரபாகர், மாவட்ட இளைஞர்அணி துணைஅமைப்பாளர்கள் சர்வேதயன், கோசி.திருமாவளவன், ஜெ.ஜுபையர் அகமது, வினோத்பாண்டி மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர்கள் க.சுரேஷ், மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: மயிலாடுதுறை மாவட்டத்தை மேம்படுத்தும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தின் உட்கட்டமைப்புகளை செம்மைப்படுத்து மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ரூ. 114.48 மதிப்பில் 7 தளங்களுடன் கட்ட கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கால் நாட்டி அந்த கட்டிடப் பணிகள் வேகமாக முடிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மயிலாடுதுறைக்கே நேரடியாக வருகை தந்து கட்டிடத்தை திறந்து வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட கழகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சீர்காழி ரயில் நிலையத்தில் வழங்கப்பட்ட மாபெரும் வரவேற்பில் கலந்து கொண்ட மாவட்டப் பொறுப்பு அமைச்சர், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவருக்கும் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட ஓ.எம்.ஆர். படிவத்தை காலத்தில் பூர்த்தி செய்து மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கும், பணியை சிறப்பாக முடித்து தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாககள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 மற்றும் பி.எல்.சி.யைச் சேர்ந்தவர்கள், கழகத்தினர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், தலைமைக் கழகம் அறிவித்தவாறு இல்லம் தோறும் ஸ்டாலின் குரல் திண்ணை பிரச்சாரத்தை கழக அரசின் துண்டு பிரசுரங்களை எடுத்துக் கொண்டு மாவட்ட கழகத்தால் அறிவிக்கப்பட்ட பூத் பொறுப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், கழகத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி மாவட்டம் முழுவதும் முதற்கட்டமாக திண்ணை பிரச்சாரத்தை செய்திட்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பூத்துகளுக்கு தங்கள் பகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களிடம் கலந்து பேசி நேரடியாகச் சென்று கழக நிர்வாகிகள், கழகத்தினரை கொண்டு தொடர்ந்து கழக அரசின் சாதனைகளையும், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத போக்கையும் தொடர்ந்து வாக்காளர்களிடம் சென்று எடுத்து கூறி வாக்குகளை சேகரிக்கும் பணியை தொடர்ந்து செய்திட வேண்டும் என்றும், வாக்காளர்களை சந்திக்கும் போது அவர்களின் தேவைகளை கேட்டறிந்து அவற்றை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மூலம் மாவட்டக் கழகதிடம் தெரிவித்து அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்திட ஏற்பாடுகளை செய்திடுவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.



தருமபுரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி, சார்பில் ஏரியூர் ஒன்றியம் செம்மனூர் கிராமத்தில் முதலமைச்சர் , கழக தலைவர்அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் டி பி.எஸ்.இளையசங்கர் தலைமையில் மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் சாந்தரூபன் ஏற்பாட்டில் தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி 500 தென்னங்கன்றுகள் நட்டு அன்னதானம் உள்ளிட்ட நல உதவிகள் வழங்கினார். உடன் ஏரியூர் ஒன்றிய கழக செயலாளர் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் என்.செல்வராஜ், தருமபுரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர், துணை அமைப்பாளர்கள் அன்பழகன்,நாகராஜ்,இளம்கவி, மாரி, செல்வராஜ், சுகுமார், தருமபுரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பெரியண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொணடனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024



நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 29.2.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் தொகுதிகளில் போட்டியிடுவதென இன்று (12.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. மதுரை
2. திண்டுக்கல்

(கே. பாலகிருஷ்ணன்)
செயலாளர்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்மாநிலக் குழு

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024



நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 29.2.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் தொகுதிகளில் போட்டியிடுவதென இன்று (12.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. நாகப்பட்டினம்
2. திருப்பூர்

(ஆர். முத்தரசன்)
செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்மாநிலக் குழு

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

### தமிழகத்துக்கு எதிராக போதைப்பொருள் நடமாட்டம் என்ற

# புதிய ஆயுதத்தை கையில் எடுத்துள்ள ஆளுநர்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, மார்ச். 14-

புதுக்கோட்டையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை சார்பில் அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி புதுக்கோட்டை நகராட்சி கலைஞர் பூங்காவில் 11.3.2024 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. வரும் 17ஆம் தேதி வரை புகைப்படக் கண்காட்சி நடைபெற உள்ளது சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, ஆட்சியர் மெர்சி ரம்யா உள்ளிட்டோர் புகைப்படக் கண்காட்சியை தொடங்கி வைத்தனர்.

மாணவ - மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. புகைப்படக் கண்காட்சியில் அரசின் சாதனைகள் தமிழக முதல்வரின் மக்கள் நல திட்டங்கள் குறித்த விளக்க புகைப்படங்கள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளது

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி



முன்னாள் அமைச்சர் பொன்முடி மீதான வழக்கில் உச்ச நீதிமன்றம் தண்டனையை நிறுத்தி வைத்துள்ளது வரவேற்கத்தக்கது.

எம்.எல்.ஏ. பதவி திரும்ப அவருக்கு கிடைத்துவிட்டது. முதல்வர் நினைத்தால் நாளையே அவரை மீண்டும் அமைச்சராக ஆக்கலாம். இந்த தீர்ப்பு எதிர்க்கட்சிகளின் விமர்சனத்திற்கு ஒரு பதிலடியாக உள்ளது

நாடாளுமன்ற தேர்தலில் எங்களுக்கு அனைத்துமே சாதகமாக உள்ளது. தி.மு.க.விற்கு அடித்தளம் நன்றாக உள்ளது. பேஸ்மென்ட் எங்களுக்கு நன்றாக உள்ளது

பேஸ்மென்ட் மட்டும் அடித்தளம் இல்லாத ஒரு சில கட்சிகள் தான் பொய்யான குற்றச்சாட்டுகளை எங்கள் மீது கூறி வருகிறது.

எதையாவது செய்து மக்களை மாற்ற முடியுமா என்று முயற்சி செய்கின்றனர்.

பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கிறார்கள். எந்த ஒரு பொய் பிரச்சாரமும் தமிழக மக்களை மாத்திராது.

ஆளுநர் புதிதாக ஒரு ஆயுதத்தை தற்போது கையில் எடுத்துள்ளார் இவ்வளவு நாள் அவர் தூங்கி உள்ளார் என்று நினைக்கிறேன்.

தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டம் உள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். எங்கே நடமாட்டம் உள்ளது என்று அவர் கூற வேண்டும். தமிழக அரசு போதைப் பொருள் நடமாட்டம் இருந்தால் உடனடியாக அவற்றை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இதேபோன்று மீதமுள்ள அமைச்சர்களின் குற்றச்சாட்டுகளும் பொய் என்று நிரூபிக்கப்படும். நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை.

போதைப்பொருள் தமிழகத்தில் அதிக அளவு உள்ளது என்று எடப்பாடி பழனிச்சாமி கூறுவது வேடிக்கையானது. இவருடைய ஆட்சி காலத்தில்தான் ஒரு அமைச்சரே போதை பொருள் விற்பனையில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று தற்போது சி.பி.ஐ. விசாரணை செய்வதற்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

தமிழகத்தில் போதை பொருள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடற்கரைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பிரதமர் மோடி மீண்டும் மூன்று தினங்கள் தமிழகத்திற்கு வருகிறார் அவர் 30 நாள் வந்தாலும் 300 நாள் இங்கே தங்கி இருந்தாலும் ஒரு இடத்தில் கூட பா.ஜ.க. வெற்றி பெற முடியாது.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டியளித்தார்.

### கோபிச்செட்டிபாளையம் - அரக்கோணம் அரசு மருத்துவமனைகளில்

# தலா 1.25 கோடியில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

ஈரோடு, மார்ச் 14-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அரசு மருத்துவமனை ஆகிய 2 அரசு மருத்துவமனைகளில் தலா ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் நிறுவப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அரசு மருத்துவமனை ஆகிய 2 மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் அமைக்க மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையால் ஆணை வழங்கப்பட்டு தலா ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதி உதவியுடன் கட்டப்படும்.

இந்திய பொது சுகாதார புதிய தரநிலைகளின்படி, ஒரே இடத்தில் மக்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ மற்றும் பொது சுகாதார பரிசோதனைகளும் கிடைக்கும் வகையில், தொற்று நோய்களின் வழக்கமான கண்காணிப்பு மற்றும் தீவிரமாக பரவும் போது தேவையான பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்ளும் வகையிலும் ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் அமைக்கப்படும். மேலும், மாவட்டத்தில் உள்ள பிற மருத்துவமனைகளுக்கு தலைமை பரிசோதனை ஆய்வகமாகவும் அமைக்கப்படுகிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தா.பழூர் ஒன்றியக் கழகச் செயலாளர்

# வா.சௌந்தர்ராஜன் விபத்தில் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச். 14–

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியக் கழகச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் 11.03.2024 அன்று இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டு மரணமடைந்தார். மரணமடைந்த ஒன்றியக் கழகச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் அவர்களின் உடலுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

### சாகித்ய அகாதமி விருது பெறும் தமிழ் எழுத்தாளர்

# கண்ணையன் தட்சிணா மூர்த்திக்குப் பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு



சென்னை, மார்ச் 14–

The Black Hill நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காகச் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருது பெறும் கண்ணையன் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**ஒரு வரலாற்று நிகழ்வை எடுத்துக் கொண்டு, அதனை மையமாக வைத்து, வடகிழக்குப் பகுதிகளின் பின்னணியில் புனையப்பட்ட The Black Hill நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காகச் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருது பெறும் கண்ணையன் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட

# 469 பயனாளிகளுக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

திருப்பூர், மார்ச். 14 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் 06.03.2024 புதன்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், நத்தக்காடையூர் லட்சுமி மஹால் திருமண மண்டபத்தில் நத்தக்காடையூர் மற்றும் பழையகோட்டை ஊராட்சிகளில் கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட12 பயனாளிகளுக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப்பட்டாகளையும், 145 பயனாளிகளுக்கு நலவாரிய அட்டைகளையும், 503 பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீடு அட்டைகள் என மொத்தம் 660 பயனாளிகளுக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக் கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் காங்கேயம் ஒன்றியத்திற்குட்பட்ட நத்தக்காடையூர், பழையகோட்டை ஊராட்சிகளில் கலைஞர் மக்கள் சேவை முகாம் திட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டலோடு காங்கேயம் ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒருங்கிணைப்பில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அந்தந்த ஊராட்சிக்கு நேரில் வந்து நம்முடைய வேண்டுகோளை ஏற்று பல விண்ணப்பங்கள் பெறப்பட்டது. மின் இணைப்பு உரிமைத்தினுடைய பெயர் மாற்றம் செய்யதல், ஆதார் அட்டை, குடும்ப அட்டையில் பெயர் சேர்ப்பது மற்றும் நீக்குவது, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்திற்கான அடையாள அட்டைகள், அமைப்புசாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் விடுபட்டு போன நபர்கள் அளிக்கும் விண்ணப்பங்கள், பட்டா மாறுதல், முதியோர் உதவித் தொகைக்கான விண்ணப்பம் ஆகிய விண்ணப்பங்கள் பெறப்பட்டது. பொதுமக்களை நேரில் சந்தித்து மனுக்களைப் பெற்று முடிந்த வரை இங்கேயே அதற்கான தீர்வுகள் காணப்பட்டது. பொதுமக்களுடைய சிரமங்களை தவிர்ப்பதற்காக இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் பழையகோட்டை ஊராட்சியில் 1156 மனுக்கள் பெறப்பட்டு 657 மனுக்களுக்கு முகாம் அன்றே தீர்வு காணப்பட்டது. இன்று 217 பயனாளிகளுக்கு அதற்கான தீர்வு காணப்பட்டது. நத்தக்கடையூர் ஊராட்சியில் 1348 மனுக்கள் பெறப்பட்டு 668 பயனாளிகளுக்கு முகாம் அன்றே தீர்வு காணப்பட்டது. தற்போது 246 பயனாளிகளுக்கு இன்று வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள மனுக்களுக்கு உரிய முறையில் பரிசீனை செய்யப்பட்டு முடிந்தளவு தீர்வுகள் வழங்குவதற்கு நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவாக நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் என்கிற திட்டத்தை அறிவித்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு ஏறத்தாழ 85 ஆயிரம் குடும்ப அட்டைதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு துண்டுப் பிரசங்கள் வழங்கப்பட்டு என்னென்ன வகையான முகாமில் என்னென்ன விண்ணப்பங்கள் கொடுக்கலாம் என தகவல் தெரிவிக்கப்பட்டு, வரப்பெற்ற மனுக்களை பரிசீலனை செய்து உரிய சான்றுகளும், உத்தரவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆணையர் (கலால்) ராம்குமார், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா. சேமலையப்பன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கே.சிவானந்தன், சி.கருணைபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் எ.கே.எஸ். கார்த்திகேயன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே. சண்முகசுந்தரம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஷ்குமார், காங்கேயம் வட்டாட்சியர் மயில்சாமி, காங்கேயம் ஒன்றியக்குழு உறுப்பினர் எம்.ரவி உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி புதுக்கோட்டை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட சோத்துப்பாளை ஊராட்சி சொக்கநாதபட்டி மற்றும் கணபதிபுரம் ஊராட்சி கணபதிபுரம் ஆகிய பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கலையரங்கத்தினை திறந்து வைத்து,அதே பகுதியில் ஆழ்துளை கிணறு அமைப்பிற்கான பணிகளை டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் சாமிநாதன், ஊராட்சிமன்ற தலைவர்கள் முத்துச்சாமி, லட்சுமி ஆனந்தராஜ் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் துரை. சந்திரசேகரனின் மனித உரிமைக் காவலர் “தந்தை பெரியார் ” புத்தக வெளியீட்டு விழாவில் மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், காங்கிரஸ் மாநில துணைத் தலைவர் குலாம் மொய்தீன், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், இந்திய கம்யூனிஸ்ட் ஏ. வி. சரவணன், நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, ம.தி.மு.க. பாபு கோவிந்தராஜ், வி.சி.க பெரியார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை மருதம் ஒருங்கிணைப்பாளர் இரவி கார்த்திகேயன் ஒருங்கிணைத்தார்.

## திராவிட மாடல் அரசின் ‘காலை உணவுத் திட்டம்’, ‘மக்களைத் தேடி மருத்துவம்’ உள்ளிட்ட திட்டங்களால்

# தமிழ்நாட்டுப் பொதுமக்கள் பெருமளவு பயனடைந்து வருகின்றனர்!

## முதல்வரிடம் - அரசின் 11 திட்டங்கள் குறித்த மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்து - திட்டக்குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் பெருமிதம்!

**சென்னை, மார்ச் 14–**

**அரசின் 11 திட்டங்கள் குறித்த மதிப்பீடு மற்றும் ஆய்வறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று சமர்ப்பித்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த மாநில திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், “காலை உணவுத் திட்டம்’, “மக்களைத் தேடி மருத்துவம்” உள்ளிட்ட ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களால் பொதுமக்கள் பெருமளவு பயனடைந்து வருகின்றனர் என்று குறிப்பிட்டார்.**

**தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.03.2024) மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் செய்தி யாளர்களைச் சந்தித்துப் பேட்டியளித்தார்.**

அப்போது அவர் கூறியதாவது :

முதலமைச்சர் அவர்களை இன்று சந்தித்து மாநில திட்டக்குழுவில் கடந்த நான்கைந்து மாதங்களில் நாம் மேற்கொண்ட ஆய்வுப் பணிகள் குறித்த மொத்தம் 11 அறிக்கைகள் வழங்கியிருக்கிறோம். அந்த அறிக்கைகளை நான்கு வகைப்படுத்தலாம். ஒரு வகை என்னவென்றால் அரசின் திட்டங்கள் எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை ஆய்வு செய்து அதற்குண்டான அறிக்கையை அரசுக்கு அளிப்பது. பொதுவாக அரசின் திட்டங்கள் அது எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கான ஆய்வு. அதற்கு பிறகு அரசு மாறி வரும் கால சூழலில் என்னவெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது பற்றியும், நிலவரம் குறித்து நான்கைந்து ஆய்வுகள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் - பயனாளிகள், பயனாளிகளின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்பது பற்றி முதல் ஆய்வு.

இரண்டாவது ஆய்வு இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத சுகாதாரத் திட்டம், ‘மக்களை தேடி மருத்துவம்’ என்கின்ற திட்டம். இந்தத் திட்டத்தின் பலன் என்ன, இந்தத்திட்டம் எப்படி செயல்படுகிறது, அதன் பயனாளிகள் அது குறித்து எப்படி பார்க்கிறார்கள், அதிலிருந்து அவர்களுக்கு கிடைக்கக் கூடிய பலாபலன்கள் என்ன, அது குறித்து ஒரு ஆய்வு மற்றும் கண்டுபிடிப்புகள்.

மூன்றாவது ஆய்வு – கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டங்கள் போல நம்முடைய அரசு பதவியேற்ற பிறகு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் செயல்பட்டது. அந்தத் திட்டம் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறது. நகர்ப்புறத்தில் எதற்கு வேலைவாய்ப்பு திட்டம் என்ற விமர்சனம் வந்த பிறகு, அவை எங்கெல்லாம் செயல்படுகிறது, எப்படி செயல்படுகிறது என்பது குறித்தும், அவை எங்கு செயல்பட வேண்டும் என்பது குறித்த ஆய்வு.

அதற்குப் பிறகு, பொதுவாக, வெவ்வேறு பிரிவுகளில் சமூகத்தில் சில நபர்கள் விடுபட்டு போவார்கள். அதுபோல, மிகவும் விடுபட்டுப் போன பிரிவு எதுவென்றால் பழங்குடியின மக்கள். அவர்கள் மிகவும் தொலைவில் இருப்பார்கள். திட்டங்கள் சென்று சேருமா, சேராதா என்பது பற்றி நமக்குத் தெரியாது. அதனால், அரசு இத்தனை திட்டங்கள் செயல்படுத்தியிருக்கிறது. பழங்குடியின மக்களுக்கு கிராமங்களில் என்ன மாதிரி திட்டங்கள் அவர்களுக்கு சென்று சேர்ந்திருக்கிறது, எந்தெந்தத் திட்டங்கள் சென்று சேருவதில்லை என்பதற்கான சிக்கல்கள் குறித்து ஆய்வு செய்த அறிக்கையையும் வழங்கியிருக்கிறோம்.

### ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாம்!

மற்றொரு முக்கியமான ஒரு ஆய்வு – ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி நகரவேண்டும் என்று சொன்னால், உயர் கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றும், அதற்கு நாம் செய்யவேண்டிய பணிகள் என்ன என்பதையும், நமது மாணவர்கள் என்ன மாதிரியான தேர்வுகள் எழுதிகிறார்கள். அவர்கள் எழுதும் கேள்வித் தாள்கள் என்ன மாதிரி இருக்கிறது. மனப்பாடம் செய்து எழுதுவதுபோல இருக்கிறதா, யோசித்து எழுதுவதுபோல இருக்கிறதா, என்பது பற்றியும் ஆய்வு. ஞாபகத் திறன் இருக்கிறதா, அவர்களுடைய திறன் தீர்வு செய்யக்கூடிய அளவுக்கு யோசித்து செய்யக்கூடிய அளவில் இருக்கிறதா என்பதை சோதிக்க வேண்டும். அந்த மாதிரி எந்த அளவிற்கு கேள்வித்தாள் இருக்கிறது, இல்லை என்பது குறித்து கலை, அறிவியல் மற்றும் பொறியியல் ஆகிய இரண்டு துறைகளிலும் எப்படி நம்முடைய தமிழ்நாடு பல்கலைக் கழகங்களில் இருக்கக்கூடிய கேள்வித் தாள்கள் இருக்கின்றன என்பது குறித்து ஆய்வு.

அதற்கு பிறகு இருக்கக்கூடிய நான்கு ஐந்து அறிக்கைகள் என்னவென்றால், இயற்கை வளம் சார்ந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், நிதி நிலை அறிக்கையில் நிதி அமைச்சர் அவர்கள் வளர்ச்சி என்பது வளம் குன்றாததாக இருக்கவேண்டும் என்பது பற்றியும், அந்த வளர்ச்சியில் ஏற்படும் சிக்கல்கள் என்ன என்பதையும், அதனை எப்படி எதிர்கொள்வது, காலநிலை மாற்றங்களால் என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றியும், அதன் வெவ்வேறு கூறுகளை பார்த்து ஆய்வுகள் செய்திருக்கிறோம்.

முதல் ஆய்வு – Heat Mitigation Strategy – வருடா வருடம் temperature அதிகமாகிக் கொண்டே செல்கிறது. அதை நாம் எப்படி எதிர்கொள்வது என்பதை, உலக நாடுகள் எவ்வாறு strategy செய்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் ஆய்வு செய்து அதுபோல தமிழ்நாட்டில் நாம் என்ன செய்யவேண்டும். வெப்பத்தின் தாக்கத்திலிருந்து மக்களை எப்படி பாதுகாப்பது, குறைப்பது என்பது நெடுங்கால பணி, உடனடியாக நாம் செய்யவேண்டியது அவர்களை பாதுகாப்பது. அதை நாம் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து ஒரு strategy ஆய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கை வழங்கியிருக்கிறோம்.

இரண்டாவது ஆய்வு – Lower Machine



Strategy – உற்பத்தி மற்றும் போக்குவரத்து அதனால் ஏற்படும் emissionஐ எப்படி குறைப்பது.

மூன்றாவதாக, விளைநிலங்களில் சீமை கருவேல முள் மரங்கள் எந்த அளவிற்கு படர்ந்து விவசாய நிலங்களை பாதித்துக் கொண்டிருக்கின்றன, எப்படி அதை அகற்றுவது, எப்படி முற்றிலுமாக அழிப்பது என்பது குறித்து அதன் துறை சார்ந்த வல்லுநர்களை எல்லாம் அழைத்து அவர்களிடம் கலந்தாலோசித்து, அதன் சாத்திய கூறுகள் (viable strategy) என்பது பற்றி பகுத்தளித்து அதையும் வழங்கியிருக்கிறோம்.

### பச்சைப் பாலைவனங்கள்!

அடுத்ததாக, காடுகள் பச்சை பாலைவனங்களாக (Green Desert) மாறிக் கொண்டு வருகின்றன. ஒன்று அல்லது இரண்டு இனங்கள் (species) மற்ற எந்த specieயையும் வளரவிடாது. எல்லாவற்றையும் அழித்துவிடுகின்றன. நெடுங்காலத்தில் என்ன பிரச்சனை கொண்டு வந்து விடும் என்றால், வேறு எந்தத் தாவரமும் வராது. எந்த தாவரமும் வரவில்லை என்று சொன்னால், அந்த சூழலை சார்ந்திருக்கக்கூடிய விலங்குகள், அதுபோல நமக்கு நீராதாரமாக இருக்கக்கூடிய பச்சை வெளிகள் இவைகள் எல்லாம் காணாமல் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, அந்தப் பிரச்சனை எவ்வாறு தீர்வு காண்பது, நமக்கு மட்டும் அந்த பிரச்சனை இல்லை, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மேற்கு தொடர்ச்சி மலையின் கீழ் இருக்கக் கூடியவர்களுக்கு இந்தப் பிரச்சனை இருக்கிறது. அந்த மாநிலங்களில் இருக்கக்கூடிய துறை சார்ந்த வல்லுநர்களை எல்லாம் அழைத்து, இரண்டு நாட்கள் மாநாடு ஒன்றை நடத்தி, அவர்களிடமிருந்து கருத்துக்களை எல்லாம் கேட்டு, அந்தப் பிரச்சனையை எப்படி தீர்ப்பது என்பது பற்றி தொகுத்து ஒரு அறிக்கையாக அரசுக்கு அளித்திருக்கிறோம்.

### கடற்பாசி வணிக வாய்ப்பு!

அடுத்தது, கடற்பாசி மூலம் பெரிய வணிகம் செய்யக்கூடிய வாய்ப்பு அதற்கு இருக்கிறது. ஆனால், அதே சமயத்தில், மற்ற கடல் சார் உயிரினம் மற்றும் தாவரங்களை எல்லாம் அழித்துவிடக் கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அதை நாம் எப்படி கையாளுவது என்பது குறித்து ஆய்வு செய்து, அறிக்கை அரசுக்கு வழங்கியிருக்கிறோம்.

இறுதியாக, தமிழ்நாட்டில் காடுகள் அழிந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதை எவ்வாறு விஞ்ஞானபூர்வமாகவும், முறைப்படியாகவும், வேறு ஒரு அறிக்கையுடன் ஒப்பீடு செய்து, தற்போது தமிழ்நாட்டில் காடுகளின் நிலை என்னவாக இருக்கிறது என்பது குறித்து அந்த அறிக்கை கூறுகிறது.

இந்த 11 அறிக்கைகள் இன்றைக்கு அரசிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

### பேட்டி!

**கேள்வி :** காலை உணவுத் திட்டத்தினால் பள்ளிக்கூடங்களின் Ratio எவ்வளவு அதிகரித்துள்ளது,

**பதில் :** 100 சதவிகித சேர்க்கை (Enrollment) வந்துவிட்டோம். புதிதாக சேர்ப்பது என்பது பெரிய விஷயம் கிடையாது. இப்போது என்ன பிரச்சனை என்றால், வருகைப் பதிவு (Attendance) என்பது முன்பு 60 சதவீதம், 70 சதவீதம் சாதாரணமாக இருக்கும். இந்த காலை உணவுத் திட்டம் வந்த பிறகு, சாதாரணமாக 90 முதல் 95 சதவீதம் ரொம்ப சுலபமாக இருக்கிறது. இரண்டாவதாக, பள்ளிக் குழந்தைகள், பள்ளிக் கூடத்திற்கு போகமாட்டேன் என்று அடம்பிடிப்பதில்லை. குழந்தைகள் 9 மணிக்கு பள்ளிக்கூடம் என்பது தற்போது 7.30 மணி முதல் 8 மணிக்குள் பள்ளிக்கூடம் செல்வது சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. மூன்றாவதாக, குழந்தைகள் காலை உணவை விரும்பி சாப்பிடுவதாக பெற்றோர்களும், ஆசிரியர்களும் சொல்கிறார்கள். ஆசிரியர்கள் சொல்லக்கூடிய விஷயம் என்னவென்றால், குழந்தைகள் மிகவும் சோர்வாகவும், மயக்கத்தோடும் தற்போது எதுவும் இல்லை என்று சொல்கிறார்கள். இன்னும் குறிப்பாக சொல்லவேண்டுமென்றால், குழந்தைகள், பள்ளிக்கூடத்தில் தரும் உணவு போல ஏன் வீட்டில் தருவதில்லை என்று பெற்றோர்களிடம் கோரிக்கை வைக்கிறார்கள். பெற்றோர்கள், குழந்தைகள் அதை சொல்வதாக சொல்கிறார்கள். இதிலிருந்து காலை உணவுத் திட்டம் வாயிலாக தெளிவாக தெரிய வருகிறது.

இதற்கு முன்பு ஒரு ஆய்வு செய்தோம். அதனுடைய தாக்கம் (impact) எப்படி இருந்தது என்றால் , மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் வருகைப் பதிவு அதிகரிப்பது என்பது அந்த dataலிருந்து தெரிகிறது. அதையும் மாநில திட்டக் குழுவின் மூலமாக ஆய்வு செய்து கூறினோம். தற்போது ஆரம்ப மற்றும் உயர்நிலைப்பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளபடி, அரசு உதவி பெறும் பள்ளிக் கூடங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக தாய்மார்களிடம் இருந்து பெரிய வரவேற்புப் பெற்றிருக்கிறது. காலை எழுந்தவுடன் குழந்தைகளை எழுப்பி, சாப்பாடு வழங்கி அவர்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது என்பது ஒரு தனி வேலை. அந்த வேலையிலிருந்து பெரிய pressureலிருந்து விடுதலை ஆகிவிட்டோம் என்பது பெற்றோர்கள் கூறும் கருத்து. இரண்டாவதாக, குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு சந்தோஷமாக செல்கிறார்கள். இவைகள் இரண்டும் தான் மிகவும் குறிப்பாக சொல்லவேண்டிய கருத்து.

மூன்றாவதாக, குழந்தைகள் சாப்பிட்டார்களா, சாப்பிடவில்லை என்பது பெற்றோர்களின் கவலையாக இருந்தது. இப்போது அந்த கவலை இல்லை என்று சொல்கிறார்கள். தற்போது, நிம்மதியாக இருப்பதாக கூறுகிறார்கள். இவையெல்லாம் ஆய்வு செய்ததிலிருந்து கிடைத்திருக்கிறது.

**கேள்வி :** Nutritionயை ஆய்வு செய்ய வேண்டுமா

**பதில் :** அதற்குண்டான Bench mark செய்திருக்கிறோம். இது one time impact study கிடையாது. ஐந்தாறு மாதங்களுக்கொரு முறை செல்லவேண்டும். தற்போது கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கைக்குப் பிறகு ஐந்தாறு மாதங்கள் கழித்து திரும்பவும் ஒரு ஆய்வு செய்யவேண்டும். இதை சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ள மருத்துவர்கள் செய்கிறார்கள். அதன் வழியாக அவர்களுடன் இணைந்து தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைத்து மருத்துக் கல்லூரிகளில் இருக்கக்கூடிய மருத்துவ பேராசிரியர்கள் மூலமாக ஆய்வு செய்யப்படுகிறது.

### உணவுமுறை!

**கேள்வி :** உணவுமுறை பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா

**பதில் :** இப்போது இருக்கக்கூடிய உணவு முறைகள் பிடித்திருக்கிறது. குறிப்பாக சாம்பார் அவர்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அது மட்டுமல்லாமல், இட்லி, தோசை கொடுக்கமுடியுமா என்று கேட்கிறார்கள். இட்லி, தோசை கொடுப்பதால் என்ன சிக்கல் வரும் என்றால், அனைத்து இடங்களிலும் இதை கொடுக்க முடியுமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**கேள்வி :** நகர்புற வேலைவாய்ப்பு அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா?

**பதில் :** Demand இருக்கிறது. பெரிய நகரங்களில் அது தேவையில்லை. சென்னை போன்ற நகரங்களில் சம்பளம் கொடுத்தால் யாரும் வேலைக்கு வரமாட்டார்கள். அதே சமயத்தில், நகர்ப்புறம், கிராமப்புறம் என்று பிரிக்கும்போது, அந்த விளிம்பு பகுதிகளில் உள்ளவர்களுக்கு நிறைய demand இருக்கிறது. அங்கு வேறு வேலைவாய்ப்பு கிடையாது. ஆனால், பெரிய நகரங்களில், எத்தனையோ வேலை இருக்கும். அந்த மாதிரி இடங்களில் தான் மிகவும் தேவைகள் இருக்கும். தற்போது Municipalities போன்ற இடங்களில் இந்த திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறோம்.

**கேள்வி :** காலை உணவு திட்டம் வந்த பிறகு வருகை பதிவு 90 சதவீதம் முதல் 95 சதவீதம் வரை வருகிறார்கள். மீதம் உள்ள 10 சதவீதம் பேர்

**பதில் :** புலம்பெயர் (Migrant) போன்ற காரணங்களால் பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் enroll ஆகி திரும்பவும் புலம்பெயர்ந்து வேறு ஊருக்கு போய்விடுவார்கள்.

**கேள்வி :** நகர்புற வேலைவாய்ப்பு CSR நிதியிலிருந்து செய்யப்படுகிறதா

**பதில் :** முழுக்க முழுக்க அரசு பட்ஜெட்டின் மூலமாக வழங்கப்படுகிறது.

**கேள்வி :** பழங்குடியின மக்கள் எந்த பகுதிகளில் அதிகமாக வசிக்கிறார்கள். முறையாக திட்டங்கள் போய்ச் சேருகிறதா, சாலைகள் வசதிகள் இருக்கிறதா அது பற்றி.

**பதில் :** அதில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட துறையின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். இந்த திட்டங்கள் எல்லாம் சரியாக போய்ச் சேருவதற்கு என்னென்ன சிக்கல்கள் இருக்கிறது என்பதற்கான பட்டியல் ஒன்றை தயாரித்து குறிப்பாக எங்கெங்கு பிரச்சனை இருக்கிறது என்பதையும் பெறப்பட்டு தற்போது தலைமைச் செயலாளரிடம் கொடுத்து வந்திருக்கிறோம். தலைமைச் செயலாளர் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளரிடம் வழங்கி அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**கேள்வி :** ஊட்டச்சத்து அதிகரிப்பது பற்றி

**பதில் :** ஆரோக்கியம் சம்பந்தமாக என்னென்ன பிரச்சனைகள் இருக்கிறது போன்ற விஷயங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

**கேள்வி :** சீமைக் கருவேல மரங்கள் குறித்து தொடர்ந்து நீதிமன்றங்கள் மாநில அரசுகளுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் செயல்படுத்தவில்லை அது பற்றி..

**பதில் :** சீமைக் கருவேலை மரங்களை ஒரு தடவை எடுத்தால் போதாது. அதை தொடர்ந்து 5 வருடங்களுக்கு கண்காணித்துக் கொண்டிருக்கவேண்டும். எந்த மாநிலங்களிலும் முழுமையாக எடுக்கவில்லை என்றும், எல்லோரும் சோதனை செய்து தான் பார்க்கிறார்கள். விளைநிலங்களும் பாதிக்கப்படுகிறது. சோதனை அடிப்படையில் என்ன success இருக்கிறது என்பதற்கு அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான resources mobilize செய்வதுதான் அரசின் பெரிய சவாலாக இருக்கிறது.

இவ்வாறு ஜெ.ஜெயரஞ்சன் பேட்டியளித்தார்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் –

# அமைச்சர் ஐ.பெரியசாமி சம்பந்தி வத்தலக்குண்டு து.செல்லப்பாண்டி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச். 13–

கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் சம்பந்தி வத்தலக்குண்டு து.செல்லப்பாண்டி அவர்கள் வயது (64) 11.03.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த து.செல்லப்பாண்டி அவர்களுக்கு ராஜாத்தி என்ற மனைவியும் இரண்டு மகள்களும் உள்ளனர். இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.



திருப்பூர், உடுமலைப்பேட்டை நகர கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளர், இல.பத்மநாபன் தலைமையில், நகர கழக செயலாளர் செ.வேலுச்சாமி முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா, அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் சிறப்புரையாற்றினர். இதில் இரா.ஜெயராமகிருஷ்ணன், பிரபாவதி பெரியசாமி, கு.சண்முகசுந்தரம் எம்.பி. உள்பட பலர் கலந்து கொண்டனர்.




திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள், பி.எல்.ஏ2 மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் செ.இராமலிங்கம் எம்.பி., அரசு கொறடா முனைவர் கோவி.செழியன், தொகுதி மேற்பார்வையாளர் வேதரெத்தினம், மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது, ஒன்றியச் செயலாளர்கள் கூகூர் சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, மிசா.என்.மனோகரன், ஜெ.சுதாகர், இர.உதயசந்திரன், பேரூர் செயலாளர்கள் எஸ்.கே.பஞ்சநாதன், சுந்தர.ஜெயபால், கோ.சி.இளங்கோவன், டி.சப்பானி, மகாலிங்கம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டம் - திருமயத்தில்

# ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத்துறை - பொது சுகாதாரத்துறை கட்டடங்கள்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - மா.சுப்பிரமணியன் - சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, மார்ச் 14-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், இராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத் துறை மற்றும் பொது சுகாதாரத்துறை கட்டடங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஐ. சா.மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று முன்தினம் (12.03.2024) திறந்து வைத்து, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி

இதைத் தொடர்ந்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொது மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இன்றையதினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத் துறை மற்றும் பொது சுகாதாரத்துறை கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

இதன்மூலம் இப்பகுதிகளை சுற்றியுள்ள பொதுமக்கள் மருத்துவத்திற்காக நீண்ட தூரம் சென்று வருவது தவிர்க்கப்பட்டு, தங்களது இல்லங்களுக்கு அருகாமையிலேயே மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதனை இப்பகுதி பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்.

எனவே தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன்

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களும் உயர்தரத்திலான மருத்துவ சிகிச்சைகளை பெற வேண்டும் என்ற அடிப்படையில் மருத்துவத்துறை சார்ந்த எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் உள்ளிட்டவைகளுக்கு தேவையான கூடுதல் கட்டடங்கள், மருத்துவ சிகிச்சை பிரிவுகள், மருந்து இருப்புகள், மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பணியிடங்கள் போதுமான அளவில் நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத்துறை மற்றும் பொது சுகாதாரத்துறை கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

அந்தவகையில், திருமயம் ஊராட்சி ஒன்றியம், இராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்ற விழாவில், அரசு மருத்துவமனைகள், விராலி மலையில் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் மற்றும் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கண் அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் செவித்திறன் ஆய்வு அரங்கம் மற்றும் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் தாய்ப்பால் வங்கி மற்றும் விராலி மலை அரசு மருத்துவமனையில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் அவசர சிகிச்சை விபத்துப்பிரிவு உள்ளிட்ட முடிவுற்ற மருத்தவக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள், திருமயம் ஊராட்சி ஒன்றியம், இராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், தேசிய சுகாதார திட்டம் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ், ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள புற நோயாளிகள் பிரிவு கட்டடம் மற்றும் ராங்கியத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள செவிலியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் விராச்சிலையில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் விராலிமலை பாலாண்டம் பட்டியில், ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் முக்கணா மலைப்பட்டியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் அறந்தாங்கியில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் மீமிசல் புறநோயாளிகள் பிரிவு கட்டடம் உள்ளிட்ட முடிவுற்ற மருத்துவக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் துணை சுகாதார நிலையங்கள், விராலிமலை புதுதக்குடியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் கந்தர்வகோட்டை மருதூரில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் உப்பிலியக்குடியில் ரூ.25 மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் அறந்தாங்கி அம்பலவானேந்தலில் ரூ.46.5 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் அறந்தாங்கி அம்மாபட்டிணத்தில் ரூ.46.5 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் புதுக்கோட்டை எம். தெற்கு தெருவில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் ஆலங்குடி பாலையூரில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வெண்ணாவல்குடியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் கந்தர்வகோட்டை வேம்பன்பட்டியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் ஆலங்குடி குளவாய்ப்பட்டியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் உள்ளிட்ட முடிவுற்ற மருத்துவக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் நலன் காக்கும் வகையில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், இதயம் காப்போம் திட்டம், சிறுநீரகம் காப்போம் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களினால் ஏழை, எளிய பொதுமக்களும் நோயில்லா நல்வாழ்வு வாழ முடியும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

### அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களுக்கும் நல்ல மருத்துவ சிகிச்சைகள் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, பல்வேறு மருத்துவத்துறை சார்ந்த கட்டடங்கள் திறந்து வைத்து, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் இன்றையதினம் வழங்கப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின்கீழ், 2023 - 2024 ஆம் நிதியாண்டில் இதுநாள் வரை 21,056 பயனாளிகளுக்கு ரூ.12.70 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கண்ணொளி காப்போம் திட்டத்தின்கீழ் 2023 - 2024 ஆம் நிதியாண்டில் 3,669 பயனாளிகளுக்கு கண் கண்ணாடிகளும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மருத்துவத்துறை கட்டிடங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் பொதுமக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களுக்கு அருகாமையில் உள்ள அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையங்களை பயன்படுத்தி நோயில்லா நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்ல பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.ஸ்ரீபிரியா தேன்மொழி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.இரா.மணி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி. பா.ஐஸ்வர்யா, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), தொழிலதிபர் வள்ளியப்பன், திருமயம் ஒன்றியக்குழுத் தலைவர் அழ.ராமு, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் பிரவீன்குமார் அரசு ஒப்பந்தகாரர் கணேசன், வட்டாட்சியர் புவியரசன், இராங்கியம் ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.சாந்தி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி.கலைச்செல்வி, கிராம நிர்வாக அலுவலர் ஜெகதீசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், இராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத்துறை மற்றும் பொது சுகாதாரத்துறை கட்டடங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று முன்தினம் (12.03.2024) திறந்து வைத்தனர். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , சுந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் , இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.ஸ்ரீபிரியா தேன்மொழி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), தொழிலதிபர் வள்ளியப்பன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியில்

# புதிய பள்ளிக் கட்டிடம்!

## இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

விழுப்புரம், மார்ச் 14-

விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம், காணை தெற்கு ஒன்றியம், தெளிமேடு ஊராட்சி, ஒன்றிய தொடக்கப்பள்ளியில், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளி வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இதில் ஒன்றியக் குழு பெருந்தலைவர் கலைச்செல்வி, வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்டக் கவுன்சிலர் சிவக்குமார்,

மாவட்ட நிர்வாகிகள் சுந்தரமூர்த்தி, கொத்தமங்கலம் சந்திரசேகர், ஒன்றிய நிர்வாகிகள் பழனி, செல்வம், செல்வராஜ், கருணாகரன், மதன், புனித ஐயனார், சிவராமன், நாராயணசாமி, ராஜேந்திரன்,

ஒன்றியக் கவுன்சிலர் ஜெயாகுமரன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் விமலா அறிவழகன், கோனூர் சிவ சங்கர்,

கிளை செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, அரிகிருஷ்ணன், கிளைக் கழக நிர்வாகிகள் முருகன், தர்மராஜ், ஏழுமலை, கண்ணன், அன்பழகன், செல்வம், தங்கவேல், குமார், திருமால், முனுசாமி, மணி, பன்னீர் செல்வம், சுபாஷ், சிவகுமார், சக்கரவர்த்தி, கோபாலகிருஷ்ணன், எத்திராஜ், காமதேவன், செல்வம், வடிவேலு, வெங்கடேசன், கிரிதாசன்,

இளைஞர் அணி நிர்வாகிகள் குமரன், ரமணன், மணியரசன், கோனூர் நிர்வாகிகள் முருகன், செந்தில், மண்ணாங்கட்டி, கொத்தமங்கலம் நிர்வாகிகள் மணிகண்டன் காளிதாஸ்,

தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் கதிரவன், ராகுல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# இடம் பொருள் கலைஞர்

61

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை!**




# அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை!

## மண் சார்ந்த நலவாழ்வுக்கான முயற்சி

இந்தியாவில் இரண்டு விதமான மருத்துவ முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஒன்று, ஆங்கில வழி மருத்துவம். இன்னொன்று, இந்திய மருத்துவம். ஆங்கில வழி மருத்துவத்தில் நவீன அறிவியலின் அடிப்படையில் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. இந்திய மருத்துவம் என்பது சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஆகிய மருத்துவமுறைகளைக் கொண்டது.

2014-ஆம் ஆண்டு ஒன்றிய அரசில் பாரதிய ஜனதா கட்சி வந்தவுடன், மேற்கண்ட இந்திய மருத்துவ முறைகளில் யோகா, நேச்சுரோபதி எனும் இயற்கை வழி மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகியவையும் சேர்ந்துகொண்டன. இவற்றை 'ஆயுஷ்' என்ற ஒரே துறையின் கீழ் ஒன்றிய அரசு நிர்வகித்து வருகிறது.

தொடக்கத்தில், சித்தா, ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவ முறைகள் தனித்தனியாகச் செயல்பட்டு வந்த நேரத்தில், அவற்றை ஒரே இடத்தில் வழங்கும் தொலை நோக்குப் பார்வை முத்தமிழறிஞர் கலைஞரிடம் இருந்தது. ஆகவே, இந்த மருத்துவ முறைகளை மண் சார்ந்த மக்கள் நல்வாழ்வு முறையாக அங்கீகரித்து, அதற்கென தனி மருத்துவமனையை 70-களிலேயே யோசித்தவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரால் ஏற்படுத்தப்பட்டது தான், 'அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை'.

### 100 படுக்கை வசதிகளுடன்

இந்திய மருத்துவத்தில் பொதுமக்களுக்கு அதிக மருத்துவ வசதிகளை அளித்திடவும், ஏற்கெனவே அமைந்துள்ள மருத்துவ வசதிகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் தகுந்த வழிவகைகளை ஆய்வு செய்து மாநில அரசு களுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கத்துடன் அன்றைய காங்கிரஸ் ஒன்றிய அரசு, 'இந்திய மருத்துவமுறை மேம்பாட்டுக் குழு' என்ற ஒன்றை நியமித்தது.

அதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் 200 படுக்கைகள் கொண்ட இந்திய மருத்துவ மனை ஒன்றை சென்னை அரும்பாக்கத்தில், 'அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை' என்ற பெயரில், 8.25 இலட்சம் ரூபாய் செலவில் கலைஞர் அவர்களால் 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக, ஆண்களுக்கு 60 படுக்கைகள், பெண்களுக்கு 40 படுக்கைகள் என 100 படுக்கை வசதிகளுடன் இயங்கத் தொடங்கப்பட்ட இந்த மருத்துவமனையில், சித்தா, ஆயுர்வேதம் மற்றும் யுனானி ஆகிய மூன்று மருத்துவமுறைகளிலும் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. தொடக்கத்தில் 73 வகையான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த இந்த மருத்துவமனையில் இன்று, நூற்றுக்கும் மேற்பட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவமனை திறக்கப் பட்ட ஆரம்ப நாட்களி லேயே நாள் ஒன்றுக்கு சுமார் 1,000 நோயாளிகள் இங்கு வந்து சிகிச்சை பெற்றுச் சென்றனர்.



### கோயில்தோறும் மருத்துவமனைகள்!

இந்திய மருத்துவ முறைகளை, மாட்டுச் சாணம், கோமியம் என்று 'மதம்' கலந்து பா.ஜ.க அரசு வழங்கி வரும் வேளையில், இவற்றை 'இயற்கை' கலந்து வழங்கியது நம் கழக அரசு. பொதுவாக, சித்த மருத்துவ முறை என்பது மூலிகைகள் சார்ந்து இயங்குவது. அந்த காலத்தில் மூலிகைகள் எல்லாம் காடுகள், மலைகள் போன்ற இடங்களில், கோயில்களைச் சுற்றி வளர்க்கப்பட்டன. மேலும் கோயில்களில் தல விருட்சங்கள் என்ற பெயரில் மூலிகை மரங்களும் வளர்க்கப்பட்டன. எனவே, சித்த மருத்துவ முறை இறை நம்பிக்கை சார்ந்த ஒன்றாகவும் இருந்தது.

அதனால்தான் இந்த மருத்துவமனையின் திறப்பு விழாவில் பேசிய கலைஞர் அவர்கள், "ஆண்டுக்கு ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள ஒவ்வொரு கோயிலிலும் ஒரு சித்த மருத்துவமனை இருக்க வேண்டும் என்று தமிழக அரசு திட்ட மிட்டுள்ளது. இதற்கான பணிகளை அறநிலையப் பாதுகாப்புத் துறை மேற்கொண்டிருக்கிறது. தமிழகத்தில் இலட்ச ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள கோயில்கள் 49 உள்ளன. எனவே, 49 சித்த மருத்துவமனைகளை உருவாக்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அன்றைய கல்வி மற்றும் பொதுநல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில், "இந்திய மருத்துவம், இந்த நாட்டு மக்களுக்கு ஏற்ற மருத்துவமாகும். இந்த நாட்டின் தட்ப வெப்பம், உணவு முறை, உடல் பாகுபாடு ஆகியவற்றிற்கேற்ப அவற்றை ஆராய்ந்து வளர்த்து வந்த முறையாகும். இந்த மருத்துவத்தின் மூலம் நல்ல மருந்துகள், மிக மலிவாகக் கிடைக்க வாய்ப்புண்டு" என்றார்.



தமிழ்நாடு அரசு
அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை
சென்னை-29.
தமிழ்நாடு அரசு கல்வி, சுகாதார அமைச்சர்
மாண்புமிகு திரு இரா.நெடுஞ்செழியன்
அவர்கள் தலைமையில்
தமிழ்நாடு அரசு முதலமைச்சர்
மாண்புமிகு திரு மு.கருணாநிதி அவர்களால்
17-9-1970 அன்று திறந்து வைக்கப்பட்டது.
மருத்துவர் சி.எஸ். உத்தமராயன்
இயக்குனர் இந்திய மருத்துவத்துறை
தமிழ்நாடு.

இந்திய மருத்துவ முறைக்கு மருத்துவமனை எழுப்பியது மக்கள் நலவாழ்வு தொடர்பான நடவடிக்கைகளில் ஒரு பகுதிதான். கலைஞரின் தலைமையிலான கழக அரசின் ஆட்சிக் காலத்தில்தான் சித்த மருத்துவ முறை மருத்து வம் மற்றும் குண பாடம் ஆகிய துறைகளில் முதுநிலைப் படிப்பு (1972) வழங்கப்படத் தொடங்கியது. அடுத்தபடியாக, சித்தர் அறி வியல் வளர்ச்சிக் குழு (1973) தொடங்கப்பட்டது. இதன் வாயிலாக, இந்திய மருத்துவப் படிப்பு களுக்கான பாடநூல்கள் தயாரிக்கப்பட்டன. தொடர்ந்து மருந்தாளுநர் பட்டயப் படிப்பு (1974-75) தொடங்கப்பட்டது.

### மூலிகைப் பண்ணைகள்!

நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனையை மட்டும் கட்டாமல், அவர்களுக்குத் தேவைப்படும் மருந்துகளை வழங்கும் மூலிகைகளை வளர்க்க, 'மூலிகைப் பண்ணை' அமைக்கவும் திட்டமிட்டார் கலைஞர் அவர்கள்.

"9 ஏக்கர் நிலத்தில் மூலிகைகள் வளர்க்கப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் உள்ள சித்த மருத்துவ நூல்கள் ஆராயப்படுகின்றன. பிணி களைக் குணப்படுத்துவதில் சித்த வைத்தியம் தலைசிறந்தது என்பதனை மக்கள் உணர்ந்து, ஆர்வத்துடன் அதை நாடி வரும்படி செய்ய வேண்டும்" என்றார் கலைஞர்.

இந்த மருத்துவமனை, 50 ஆண்டுகளைக் கடந்து மக்களை நலமாக்கி வருகிறது.

**...வலம் வருவோம்**

### காவியிச குடியுரிமைச் சட்டம்!




மக்களவைத் தேர்தல் தேதி அறிவிப்பினை நாடு எதிர்பார்த்துக் கொண்டிருக்க, தேசிய குடியுரிமைச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது மோடி அரசு.

இந்தியா மதச்சார்பற்ற நாடு என்பதை மாற்றி, இந்துக்களின் நாடு எனும் பிம்பத்தை உருவாக்க நடந்திடும் இந்த வேலைகளை 'காவியிச குடியுரிமைச் சட்டம்' நூலின் மூலம் அம்பலப்படுத்து கிறார் திருவாரூர் அர.திருவிடம்.

இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக எழும் குரல்களைக் கேள்விகளாக்கி, அதற்கான விடைகளைக் கொடுத்துள்ளார்.

அசாம் சம்பந்தப்பட்ட - அசாம் மாநிலத்துக்கு மட்டுமே என்று உருவாக்கப்பட்ட தேசிய குடியுரிமைப் பதிவேடு முறையை இந்தியா முழுவதற்கும் அமல்படுத்த வேண்டிய நோக்கம் என்ன? என்பதை, இந்த நூலில் அறிந்து கொள்ளலாம்.

அரசியல் சாசனத்திற்கும், மதச்சார்பின்மைக்கும் எதிராக மோடி அரசு கொண்டுவந்துள்ள இந்தச் சட்டம் ஒரு மோசடித் திட்டம் என்பதைப் புரிந்து கொள்ள காவியிச குடியுரிமைச் சட்டம் நூல் வழிகாட்டும்.

இந்த நூலினை சீதை பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

### ஃப்ளாஷ்பேக்





பிரபு

### தோள் தாங்கிய கரம்!

2003-ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று எனது 18-வது பிறந்தநாளை முன்னிட்டு, அண்ணா அறிவாலயம் சென்று, தலைவர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றேன். இன்றைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களும் அப்போது உடனிருந்தார். அன்றைய சந்திப்பின்போது நான்தான் கடைசியாக அனுமதிக்கப்பட்டேன். புகைப்படம் எடுத்துக்கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் கிளம்பும் போது அவரது வாகனம் வரை, என் தோள் மீது கை வைத்தபடியே நடந்து வந்தது, இன்றைக்கும் மறக்க முடியாத நிகழ்வாக இருக்கிறது.

**-வே.பிரபு,**
**மாவட்டத் துணை அமைப்பாளர்,**
**கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை,**
**நாமக்கல் கிழக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

#### தனிக்கட்சியும் இணைப்பும்!

1961-ஆம் ஆண்டில், திராவிட நாடு கொள்கை தொடர்பாக பேரறிஞர் அண்ணாவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்து சென்றார் ஈ.வெ.கி.சம்பத். கழகத்தின் முதல் பிரிவாக அந்த சம்பவம் அமைந்தது. பிரிவுக்குப் பின்னர் சில நண்பர்களுடன் சேர்ந்து 'தமிழ்த் தேசியக் கட்சி' என்ற பெயரில் தனிக்கட்சி தொடங்கினார் சம்பத். 1962-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இந்தக் கட்சி, படுதோல்வியைச் சந்தித்தது. காலப்போக்கில் அந்தக் கட்சி காங்கிரஸுடன் இணைக்கப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

417

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131